www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණොට්ටම්

வெளியீடு: 31 | 15 ஐப்பசி 1996 | விலை: ரூபா 7.00

## வட-கிழக்கு புனருத்தாரண நடவடிக்கைகள்

# முடக்கப்படும்?

இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசங்களில் புனர் நிர்மாண வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. யாழ் யுத்தத்தின் போது 80 வீதமான வீடுகள் முழுமையாகவோ பகுதியாகவோ சேதமடைந்துள்ளதாகவே அரச புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

இதைவிட மின்சாரம், தொலைபேசி, பாதைகள் சீரமைத்தல், போக்குவரத்தென இன்னும் பல பிரச்சினைகள் அங்குள்ளன. இவை மிக விரைவாக சீரமைக்கப்படாவிட்டால், மக்களை மீளக் குடியேற்றுவதென்பது மிகக் கடினமாகும்.

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டவுடன், கொழும்பில் இருக்கும் ராஜதந்திரிகளை அழைத்த ஜனாதிபதி அவர்கள், யாழ்ப்பாண புனருத்தாரண வேலைகளுக்கான உதவிகளை அவர்களிடம் கோரியிருந்தார். பிரித்தானியா, முன்னர் அன்பளிப்புச் செய்த சுன்னாகம் மின்சார நிலையத்தை சீரமைத்துத் தருவதாக உறுதி கூறியதைத் தவிர, வேறு எந்த நாடும் பெரிய அளவில் உதவி அளிக்க முன்வரவில்லை.



### சமாதானம் இன்றி உதவிகள் இல்லை
### உதவி வழங்கும் நாடுகள் கைவிரிப்பு

வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் டெல்லியில் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, மக்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்ற இரண்டே முக்கால் கோடி ரூபா பெறுமதியான அரிசியை இந்தியா அன்பளிப்புச் செய்துள்ளது. இவை தவிர, நிரந்தரச் சமாதானம் ஏற்படும் வரையில் எந்த ஒரு நாடும் வட-கிழக்கு புனர் நிர்மாண வேலைகளுக்கு உதவி வழங்கத் தயாராக இல்லை என்பதே உண்மை. அதே சமயம், அடுத்த மாதம் பரீஸில் நடக்க உள்ள, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் வட-கிழக்கு நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நடத்தப்பட மாட்டாது எனவும் தெரியவருகிறது. அரசாங்கம் எவ்வளவுதான் முயற்சித்த போதும், நிவாரணம் சம்பந்தமான விடயம் இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் இடம்பெறவில்லையாம். கடந்த வருடம் இலங்கையின் அபிவிருத்திக்கென கிடைத்த அதேயளவு உதவி இவ்வருடமும் கிடைக்குமா என்பதே கேள்விக்குரியதாக உள்ளது.

ஆனால், நிரந்தரமான சமாதானம் ஒன்று ஏற்படுமிடத்து, வட-கிழக்கு அபிவிருத்திக்கும், புனர்நிர்மாண வேலைகளுக்கும் நிதி அளிப்பது தொடர்பாக அவர்கள் எந்நேரமும் பிரத்தியேக கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்கு தயாராக உள்ளனர். அம்முழுமையான செலவுகளை ஏற்றுக்கொள்ளவும், அதை உத்தரவாதம் செய்யவும் இந்நாடுகள் தயாராயிருப்பதாகவும் அறிய முடிகிறது.

ஆனால் இலங்கை அரசாங்கம், மேலும் மேலும் யுத்தத்தை திணித்து அகதிகளையும் அவலங்களையும் அழிவுகளையும் உருவாக்கியபடியே நிவாரண உதவிகளுக்கு கையேந்துகிறதென்பது விசனிக்கத்தக்கது.

அஷ்ரஃப் அவர்கள் அமைச்சரானவுடன், இரண்டு வருட காலத்துள் புனர்வாழ்வு அமைச்சு தேவைப்படாது எனக் கூறினார். ஆனால், அடுத்த 25 வருடங்களுக்கு புனர்வாழ்வமைச்சின் தேவை தவிர்க்க முடியாதது என்ற சூழ்நிலையே உருவாகி வருகின்றது.

அரச கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பிரதேசங்களில் மனித உரிமை மீறல்களும் பெரியளவில் இடம்பெறத் தொடங்கி விட்டன. வெள்ளை வானில் கடத்துவது, விசாரணைக்கழைத்து காணாமல் போவது, பாலியல் வன்முறைகள் என அரச படையினரின் அத்துமீறல்கள் தொடங்கியுள்ளன.

மறுபுறத்தில் துரோகிகளுக்குத் தண்டனை என்ற பெயரில், இராணுவத்தினருடன் பேசுபவர் பேசாதவர்கள் எல்லோருக்கும் புலிகளின் மரண தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த அடிப்படையில், புலிகளுக்கு பணம் கொடுத்தவர்கள், புலிகளிடம் பாஸ் வாங்கியவர்கள், புலிகளுடன் கதைத்தவர்கள் என்று பார்த்தால், அங்குள்ள முழு மக்களுக்கும் இராணுவம் தண்டனை வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே காலம் நீண்டுகொண்டே போக, பிரச்சினைகளும் அநாவசியமாக அதிகரித்தே செல்கின்றன என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மக்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்ய முடியாத அரசு, நிலப் பரப்புகளைப் பிடித்து மக்களை அகதிகளாக்குவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. இதனால் அரசின் மீது இருக்கும் அவநம்பிக்கை மேலும் தொடருமே தவிர, வேறு பிரயோசனங்கள் ஏற்படாது.

எனவே அரசு உள்ளதையாவது காப்பாற்ற விரும்புமாயின், உடனடியாக சமாதான வழியில் அரசியல் தீர்வொன்றைக் காண முனைப்பாகச் செயல்பட வேண்டும். ●

## தமிழ்க் கட்சிகள் சிந்திக்க வேண்டும்

கடந்த வாரம் திருகோணமலையில் சப் இன்ஸ்பெக்டர் நவரத்தின என்பவர் இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். சுடப்பட்டபின் இவரிடமிருந்த பிஸ்டல் ஒன்றும் அபகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, திருமலையில் இருக்கும் சகல தமிழ்க் கட்சிகளின் காரியாலயங்களும் சோதனையிடப்பட்டன. ஆனால் அங்கு யாரையும் கைது செய்யவோ அல்லது துப்பாக்கிகளை கைப்பற்றவோ இல்லை. இவ்வளவிற்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ். அலுவலகம் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களில், அவர்கள் இராணுவத்துடன் சேவையாற்றுவதற்கான ஆயுதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அப்படியாயின் ஏன் இந்த சோதனை?

இதற்கு முன்னரும் திருமலையில் இராணுவத்துடன் பணியாற்றிய பல இயக்க உறுப்பினர்களும், முஸ்லிம்களும் கூட கொல்லப்பட்டுள்ளனர். அப்பொழுதெல்லாம் எந்தக் கட்சிகளின் அலுவலகங்களும் சோதனை இடப்படவில்லை. ஏனெனில், அப்பொழுது கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள் அல்லது தமிழ் பேசுவோர். ஆனால் இப்பொழுது கொல்லப்பட்டவர் ஒரு சிங்களப் பொலீஸ்! இதற்கு முதல் நீண்ட காலமாக திருமலையில் பணி புரிந்து வந்த ஒரு சிங்கள காணி உத்தியோகத்தரும் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து, திருமலையில் இருக்கும் சிங்கள மக்கள் இயக்கங்களிடம் ஆயுதங்களைப் பறிக்குமாறு கோஷமிட்டனர். இவர்களையும் கூட திரட்டி வந்தது, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் என்றே அறியப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து, தமிழ் இயக்கங்களிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறு கொழும்பிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண சிங்கள ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ள இச் சுவரொட்டிகள் இனவாதத்தை தூண்டுவனவாகவே உள்ளன.

இது வேறேதோ பிரச்சினையைச் சமாளிப்பதற்காகக் கையாளப்படுகிற குறுக்குவழியாகவே தெரிகிறது. ஏற்கனவே திருமலை, வவுனியா, தீவுப்பகுதிகளில் எல்லாம் கொலைகள் நடந்திருக்கின்றன. பல இடங்களில் சட்டம் ஒழுங்கைக் கவனிப்பவர்களாக தமிழ்இயக்கங்கள் இருக்கின்றன. ஏதோ இதெல்லாம் தெரியாதது போல இப்போது மட்டும் தமிழ்க் கட்சி அலுவலகங்களுக்குள் புகுந்து ஆயுதங்களைத் தேடியது என்ன நாடகம்?

ஆயுதக் கலாசாரத்தை உண்மையில் ஒழிக்க விரும்பினால், அரசு இடத்துக்கு, நேரத்துக்கு, தனது தேவைக்கேற்ப பிரச்சினைகளை அணுகாது, சட்டம் ஒழுங்கை உரியமுறையில் நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். ஜனநாயக வழிக்கு வந்ததாகக் கூறிக் கொள்ளும் இயக்கங்களும் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்.

இன்றும்கூட அரசு, தமிழ்க் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கவும், மக்கள் மத்தியில் இவற்றுக்கு அவப்பெயர் உருவாக்கவும் முயற்சிக்கிறதே அல்லாமல் வேறொன்றுமில்லை. ஆயுதங்களைப் பறிப்போம், அலுவலகங்களைச் சோதனை செய்வோம் என்பதெல்லாம் வெறும் மிரட்டல்களே. இவர்கள் ஆயுதங்களை வைத்திருக்கும்வரை அரசு சந்தோஷமாகவே இருக்கும்.

ஏனெனில் எவ்வளவு காலத்துக்கு இவர்களிடம் ஆயுதம் இருக்கிறதோ அவ்வளவு காலத்துக்கு இந்த இயக்கங்களின் பெயர் சீரழியும்; மக்கள் இவர்களை வெறுத்தொதுக்குவார்கள்.

இதனைவிடுத்து, மக்களின் கோரிக்கைகளுக்காக போராடக்கூடிய ஜனநாயக சக்திகளாக இவர்கள் வளருவதையும் அரசினர் விரும்பவில்லை என்பதே தெரிகிறது. இயக்கங்கள் ஏன் இன்னும் இதனை சிந்திக்காமல் இருக்கின்றன?

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## இடைக்கால நிர்வாகம்

கடந்த இரு தசாப்தங்களாக வடகிழக்கு ஒருங்கிணைப்புக்குழு (North-East Coordinating Committee) என்ற விடயம் தொடர்பாக சகல பத்திரிகைகளும் எழுதி வருகின்றன. ஜனாதிபதி அவர்கள் புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரஃப் தலைமையில் வடகிழக்கை நிர்வகிக்க ஓர் ஒருங்கிணைப்புக் குழுவொன்றை அமைத்தார். வடகிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் என 150இற்கு மேற்பட்டோர் பங்குபற்றும் ஓர் சபையாகவே இது உருவாக்கப்பட்டது.

ஏற்கனவே கவர்னரின் கீழான ஓர் வடகிழக்கு நிர்வாகம் திருமலையில் இயங்கி வருகின்றது. இதனைவிட வடக்குக்கு ஜனாதிபதி கீழான ஓர் புனர்வாழ்வு அதிகாரசபை உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் வடகிழக்கிற்கான புனர்வாழ்வு அமைச்சர் என்றும் ஒருவர் இருக்கின்றார். இவை எல்லாம் இருக்கத்தக்கதாக இன்னொரு ஒருங்கிணைப்புக்குழு எதற்கு? என்ற கேள்வியை யாரும் எழுப்ப முடியும். அது நியாயமானதும் கூட.

வடகிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று வேண்டுமென ஈ.பி.டி.பியும் புளொட்டும் வலியுறுத்தி வந்துள்ளார்கள். இதற்கு ஈ.பி.டி.பி. முன்வைக்கும் காரணங்கள் பல. வடகிழக்கில் ஓர் அரசியல் தலைமை இல்லை. வடகிழக்கு நிர்வாகம் ஊழலில் மிதக்கின்றது. மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது. எனவே இடைக்கால நிர்வாகம் ஒன்றிருந்தால் இப்பிரச்சினைகளை அந்நிர்வாகம் தீர்த்துக் கொள்ளும் என்பதே அவரது வாதம். அத்துடன் அப்படியான ஓர் நிர்வாகத்துக்கு சட்டம் ஒழுங்கு உட்பட 13வது திருத்தச் சட்டதில் உள்ள அதிகாரங்களும் கொடுக்கப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி. வலியுறுத்துகின்றது.

ஆனால் முதலாவதாக, இடைக்கால நிர்வாகம் என்பது சட்டவாக்கும் உரிமை அற்ற ஓர் நிர்வாக அமைப்பு என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அடுத்து இச்சபைக்கு ஈ.பி.டி.பி. எதிர்பார்க்கும் சட்டம் ஒழுங்கு உட்பட்ட 13வது திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் கொடுக்கப்பட மாட்டாது என்பது இரண்டாவதாகும். அப்படி கொடுக்கும் ஓர் சிந்தனை இருந்திருந்தால் வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் 150 பேர் கொண்ட ஒரு குழுவை அரசு அறிவித்திருக்காது. இது ஈ.பி.டி.பி. யை திருப்திப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கையே தவிர வேறொன்றுமில்லை.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு அதிகப்படியான ஆசனத்தைக் கொண்ட பலவீனமான அரசாகவே இது இருந்து வருகின்றது. தொண்டமானின் இ.தொ.கா., டக்ளஸின் ஈ.பி.டி.பி., புளொட் போன்ற தமிழ்கட்சிகளின் ஆதரவு இவர்களுக்கு தேவை. இதனால் ஏதோ ஒருவகையில் இவர்களை திருப்திப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்குள்ளது. இதனைப் புரிந்துகொண்டு தான் ஈ.பி.டி.பி. இடைக்கால நிர்வாகத்தை கோருகின்றது. தொண்டமான் இன்னும் இரண்டு அதிகப்படியான அமைச்சர் பதவிகளைக் கேட்கின்றார். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அமைச்சர் பதவிகளையோ அன்றி கண்துடைப்பு சபைகளையோ கொடுக்கத் தயாராக இருக்கின்றதே அல்லாமல், முழுமையான அதிகாரங்களைக் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுக்கத் தயாராக இல்லை.

வடகிழக்கில் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வவுனியா, மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம் எங்கு பார்த்தாலும் பல்வேறுபட்ட விதமான 'பாஸ்' முறைகள் நடைமுறையில் உள்ளன. ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குப் போக பல்வேறுபட்ட விசாரணைகள், பல்வேறுபட்ட பாதுகாப்பு கெடுபிடிகள் உள்ளன. வடகிழக்கில் பெயரளவில் சிவில் நிர்வாகம் இருந்தபொழுதும் கூட இராணுவமே இறுதி முடிவெடுப்பவர்களாக உள்ளார்கள். இந்நிலையில் முழுமையான அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாவதை அவர்கள் விரும்புவார்கள் என்றில்லை. அப்படித்தான் அனுமதித்தாலும் கூட, ஒவ்வொரு சிறிய விடயத்துக்கும் பாதுகாப்புத் துறையுடன் கலந்து பேசியே இவர்கள் முடிவுகள் எடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆனால் மறுபுறம் ஈ.பி.டி.பி. யை திருப்திப்படுத்த வேண்டிய சூழ்நிலையும் உள்ளது.

ஈ.பி.டி.பி., புளொட் போன்ற கட்சிகள் ஜனாதிபதி அறிவித்த அஷ்ரஃப் தலைமையிலான வடகிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவை ஏற்கனவே நிராகரித்து விட்டார்கள். அவ்வொருங்கிணைப்புக்குழு ஓர் கண்கட்டுவித்தை, அதற்கு அதிகாரங்கள் இல்லை. அம்பாறைக்கு தனி அந்தஸ்து கோரும் அஷ்ரஃப், எவ்வாறு இவ்வொருங்கிணைப்புக்குழுவிற்கு தலைமை தாங்க முடியுமென இவர்கள் கேள்வி எழுப்பி உள்ளார்கள். அத்துடன் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து தமது எதிர்ப்பையும் தெரிவித்துள்ளதுடன், அரசு இடைக்கால நிர்வாகத்தை ஏற்காவிடில் தாம் அரசுக்கெதிராக செயற்படவேண்டி வரும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்கள்.

இதற்கு ஜனாதிபதியின் பதில், 'அரசுடன் இணையுங்கள் உங்களுக்கு அமைச்சர் பதவி தருகின்றேன்' என்பதாகும். அவ்வமைச்சர் பதவியூடாக டக்ளஸ் வடகிழக்கு மக்களுக்கு சேவை செய்யலாம் என்பதே அதன் உள்ளடக்கம். டக்ளஸும் அதனை இன்னும் நிராகரிக்கவில்லை. அமைச்சர் பதவியை ஏற்குமுன் அரசுடன் பல விடயங்களை பேசி முடிக்க வேண்டியுள்ளதாக கூறுகின்றார். சில சமயங்களில் வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவிற்கோ அல்லது அதன் பெயரை மாற்றி இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாக்கப்பட்டாலோ அமைச்சர் என்ற அடிப்படையில் அதன் தலைவராக நியமிப்பது போன்ற விடயங்களை அவர் பேசி முடிவு செய்ய வேண்டி இருக்கலாம்.

ஆனால் அரசைப் பொறுத்தவரையில், இவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுப்பதன் மூலம் இவர்கள் அரசுடன் இணைந்து வாக்களிக்க வேண்டி இருக்கும்; தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பார்கள். அத்துடன் இவர்களை உள்வாங்குவதன் மூலம் அஷ்ரஃப், சிறீமணி போன்றோர் அரசுக்குள்ளிருந்து, அதேசமயம் அரசை விமர்சிப்பது போன்ற நடவடிக்கையை கட்டுப்படுத்தலாம். இதுவரையும் அரசை விமர்சித்து, 'வெளியேறிவிடுவோம், அரசை கவிழ்த்து விடுவோம்' போன்ற பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். எனவே அரசைப் பொறுத்தவரையில் அரசுக்கு பல நன்மைகள். ஆனால், ஈ.பி.டி.பி. யைப் பொறுத்தவரையுல், தனது கட்சியை பலப்படுத்த இதற்கூடாக ஏதாவது முயற்சிக்கலாம் என்பதைத் தவிர, தமிழ் மக்கள் இன்று படும் துன்பங்களில் இருந்து வெளியேற ஏதாவது வழியேற்படுமா என்பது ஐயத்துக்குரியதே.

இடைக்கால நிர்வாகம் ஒன்று மிகவும் அதிகாரமுள்ளதாக இருக்கும் பட்சத்தில், அரசுக்கு சில விடயங்களை சுட்டிக்காட்டி அதனை நிவர்த்தி செய்ய முயற்சிக்கலாம். அன்றாடப் பிரச்சினைகளிலும் இயன்றவரை மக்களின் இன்னலைத் தீர்க்க முயற்சிக்கலாம். ஆனால் அதேசமயம், இடைக்கால நிர்வாகம் ஒன்றையே பூதாகாரப்படுத்தி, அதுதான் தீர்வு என்ற நிலைக்கு அரசு போகும் அபாயமும் உள்ளது. பாராளுமன்றத்தில் குற்றுயிரில் கிடக்கும் தீர்வுத் திட்டம் அப்படியே இறந்து விடுவதற்கான சாத்தியக் கூறுகள்தான் அதிகமுள்ளது. இந்நிலையில் இங்கிருக்கக்கூடிய சகல சிங்கள, ஆங்கில அரச தொடர்பு சாதனங்கள் எல்லாம் சேர்ந்து இதுதான் தீர்வு என்று இடைக்கால நிர்வாக விடயங்களைப் பூதாகாரப்படுத்துவதன் மூலம், அரசு தீர்வுத் திட்டத்தையும் பின்தள்ளிக் கொண்டே போகலாம். அத்துடன் இடைக்கால நிர்வாகத்தைக் காட்டியே வெளிநாடுகளின் ஆதரவையும் அரசுதொடர்ந்து பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம். இதற்கான அபாயம் தான் பாரியளவில் உள்ளது.

இறுதியாக மூன்றாம் தரப்பொன்றின் துணையுடன் அரசு பேச்சுவார்த்தையை தொடங்க சம்மதம் தெரிவித்திருக்கும் இந்நிலையில், புலிகளுக்கெதிரான அமைப்புகள் இடைக்கால நிர்வாகத்தில் இருக்கும் பட்சத்தில் பேச்சுவார்த்தை தொடங்குவதில் இழுபறிகளும் சங்கடங்களும் ஏற்படலாம். வடகிழக்கு மாகாணசபையை ஈ.பி.ஆர்.எல்.எப். நடாத்திய 89,90 காலகட்டங்களிலும், புலிகள் பிரேமதாசா அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தொடங்கிய காலகட்டத்தில் அவர்கள் வைத்த இரு கோரிக்கைகளில் ஒன்று ஈ.பி.ஆர்.எல்.எப். மாகாணசபையை கலைக்க வேண்டும்; இந்திய இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்பதே.

எனவே இவை எல்லாவற்றிற்கும் தீர்வு காணப்பட வேண்டுமாயின், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்து, அரசியல் தீர்வொன்றை காண்பதே இன்றைய அவசரத் தேவையாகும்.



### பிரகலாதர்கள் நாங்களே!

துகில்கள் உரியப்படு(க்)கையிலே
மனத்துயர் அறியா
துச்சாதனர்கள்
செருக்கின் மமதையால் - தம்
இருக்கைகளைக் காக்க - எம்
இருகைகளிலும்
அகப்பைகள் அகல
தற்காலிகமாய்
ஆயுதங்கள் தரும்
இரணியர் அறியா
பிரகலாதர்கள்
நாங்களே!

- சிவப்பன்

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-I,
மட்டக்களப்பு.
☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22070

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

படிப்பகம்

www.padippakam.com






# யாழ்ப்பாணக் கடிதத்திலிருந்து....

இதற்கு முந்திய கடிதங்களை எழுதிய போது இருந்த நம்பிக்கை எல்லாம் இழந்து விட்ட நிலையில் இதை எழுதுகிறேன். இருமல் கிழவியைக் கொடுத்து தும்மல் கிழவியை வாங்கியது போன்று இங்கு நிலைமை. ஒவ்வொரு மக்களும் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர். கிடுகு வண்டில் சிலசமயங்களில் முழுக் கிடுகும் இரண்டு மூன்று இடங்களில் பறித்து ஏற்ற வேண்டிய அவலம்; வைக்கல் வண்டிலும் அப்படியே. ஒவ்வொரு சைக்கிளில் கொண்டு போகும் சாமான்களும் அவிழ்த்துக் கட்டி ஓராயிரம் துன்பங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது.

அதுமட்டுமென்றாலும் சகிக்கலாம். வழிகளில் பெண் பிள்ளைகளை– படிக்கின்ற பிள்ளைகளை மறிப்பதும் சேட்டை செய்வதும் என்றெல்லாம் ஆரம்பித்து விட்டது. தாய் தகப்பன் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்ட மாதிரி அவலப்படுவதும் புறுபுறுப்பதுமாக உள்ளனர். இவை எல்லாம் மற்றவர்களை இன்னமும் வளர்க்கத்தான் உதவப் போகின்றது.

பெரிதாக அரசாங்கம் ஆசை வார்த்தை காட்டி யாழ்ப்பாணத்திற்கு மக்களைக் கூப்பிட்டு சோடாவும், கோல்ட்லீவ் சிகரெட்டும்தான் விற்கின்றார்களே தவிர, மற்றவை இன்னமும் ஒரு சீருக்கு வரவில்லை. அதுவும் கொழும்பில் 45 ரூபா விற்பது இங்கு 70 ரூபா. மக்கள் இவற்றை எல்லாம் எதிர்பார்த்து இங்கு வரவில்லை. சொந்த மண்ணில் ஊடாடினால் ஒரு அமைதி, ஒரு நிம்மதி கிடைக்கும் என்றுதான் இங்கு வந்தார்கள். நிம்மதியாக நடமாடலாம் என்ற நம்பிக்கை கெட்டுப் போய் விட்டது. இவர்களும் பெரிதாக ஒன்றும் கிழிக்கப் போவதில்லை.

உண்மையில் இந்த நிலையில் எல்லா தமிழ்க் குழுக்களும் ஒன்றுபட்டு நின்று குரல் கொடுக்கா விட்டால், அந்தக் குழுக்களை என்றுமே யாழ்ப்பாண மக்கள் மன்னிக்க மாட்டார்கள். சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதையாக தமிழ் மக்களை ஆக்கிவிட்டு, அலட்சியத்தோடு நடந்துகொள்ளும் அரசாங்கத்தை, தங்கள் முதுகில் ஏறிச் சவாரி செய்ய தமிழ்க் குழுக்கள் அனுமதிக்கக் கூடாது.

ஆமி கைதடியில் வைத்துப் பிடித்த அரியாலைப் பெட்டையும், அந்தக் குடும்பமும் என்னவாயிற்று என்று தெரியாது. உரும்பிராய் சந்தியில் நின்ற ராணுவத்தினர், உரும்பிராய் வடக்கில் உள்ள 22 வயதுப் பெண் பிள்ளையை மறித்து வைத்துக் கதைத்தார்கள். பின் அந்தப் பிள்ளையை காணவில்லை. அவர்கள் மறித்து வைத்துக் கதைத்ததை ஊரவர் கண்டுள்ளனர். இதுவரை எந்தத் தகவலும் இல்லை. தகப்பன் பெயர் வேலாயுதபிள்ளை, தாயின் பெயர் திலகவதி, பிள்ளையின் பெயர் ரஜினி. வயது 22. G.A.Q 95/96 படித்துக் கொண்டிருந்த மாணவி. 93ல் A/L எடுத்து நாலு பாடமும் சித்தியடைந்தவர். இவருக்கு இதுவரை என்ன நடந்ததென்று தெரியாது.

அரியாலையில் ஒரு A/L படிக்கும் பிள்ளை இராணுவ வாகனத்தால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். அந்தப் பிள்ளையை அவர்கள் கல்யாணம் முடிக்கக் கேட்டதாகவும், அது மறுத்ததாகவும், அதற்காகவே அடித்துக் கொன்றதாகவும் கதை அடிபடுகிறது. இது உண்மையாக இருக்கலாம் என்று நம்புவதற்கும் ஓரளவு காரணம் இருக்கிறது. ஏனென்றால், மீசாலையில் நடந்த இப்படியொரு சம்பவத்தை ஏற்கனவே அறிந்திருக்கிறேன். மீசாலையில் ஒரு பெட்டையையும் தகப்பனையும் வெட்டிக் கொன்றதற்கும் இதுதான் காரணம். அந்தப் பெட்டையையும் கல்யாணம் கட்டக் கேட்டதாகவும், அதை அந்தப் பெட்டை தகப்பனுக்குச் சொல்ல தகப்பன் அடித்திருக்கிறார். அதன்பின்னர் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாய்க் கொண்ட துசிதரன் (வயது19) வெள்ளை வானில் வந்தவர்களால்



கடத்திச் செல்லப்பட்டார். இரவு பத்து மணி போல வாசலில் நின்று கூப்பிட்டிருக்கிறார்கள். வெளியே வெறும் மேலுடன் வந்த துசிதரனை அடையாள அட்டை எதுவும் கேட்காமல் இழுத்துச் சென்றிருக்கிறார்கள். பின்னால் கத்திக்கொண்டு ஓடிவந்த துசிதரனின் தாயாரின் கழுத்தில் வயர் போட்டு இறுக்கியுள்ளார்கள். சிறிய தாயார் பொல்லினால் தாக்கப்பட்டார். வெள்ளை வானில் வந்தவர்கள் சிவில் உடையில் வந்தார்கள். தமக்கு துசிதரன் விடயம் பற்றி எதுவும் தெரியாதென்று இராணுவம் சொல்கிறது.

உரும்பிராய் வடக்கு பிள்ளையின் விஷயம், தாய் தகப்பன் போய் முறைப்பாடு செய்தபோது, தங்களுக்கு எதுவும் தெரியாது என்றவர்கள், பின் கச்சேரியில் நடந்த மனித உரிமை மீறல்கள் கூட்டத்தில் இதைப்பற்றிப் பிரஸ்தாபம் எழுந்த பின் இப்போது விசாரணை செய்வதாக ஓடித் திரிகிறார்கள்.

இவையெல்லாம் அரசாங்கத்தில் மக்கள் வைத்த நம்பிக்கைகளை தவிடுபொடியாக்கி இருக்கின்றது. இப்படியே ஒரு வருடம் யாழ்ப்பாணத்தில் ராணுவம் நிற்குமானால், யாழ்ப்பாணத்தவர்கள் மற்றவர்கள் மேல்தான் நம்பிக்கை வைப்பார்கள். இதை அங்கு வடிவாக எடுத்துக் கூறுங்கள்.

மக்கள் குமுறிக்கொண்டு இருக்கின்றார்கள். யாழ்ப்பாண மக்கள் அரசாங்கத்திடம் சோடாவும் கேட்கவில்லை, வெள்ளைப் பச்சை அரிசி நிவாரணத்தையும் கேட்கவில்லை. அவர்கள் தங்கள் மண்ணில் நிம்மதியான வாழ்க்கையைத்தான் கேட்கிறார்கள். வெள்ளைப் பச்சையும் அம்மாப் பச்சை அரிசியும் தின்று என்ன போசாக்கு வந்துவிடப் போகிறது? முட்டை 15 ரூபா, கடலில் மீன்பிடிக்கப் போக முடியாது, எனவே மீன் கிடையாது, விவசாயத்திற்கும் தேவையானவை இல்லை. இந்த லட்சணத்தில் என்ன போசாக்கைக் காண முடியும்!

புனர்வாழ்வு, புனரமைப்பு என்று உலகமெல்லாம் கதை அடிபடுகின்றது, இங்கே எதுவும் தெரியவில்லை. விவசாயிகளுக்கு 5 அந்தர் வெங்காயம் கொடுத்து, அதனால் அந்த விவசாயி பட்ட துன்பம் சொல்ல முடியாது. அதைப் பயிரிடுவதற்கு மேலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் செலவழித்துவிட்டு, இன்று அதைச் சந்தைப்படுத்த முடியாமல் திரும்ப முளை கிளம்பிய நிலையில் இருக்கிறது. விவசாயத்திற்கு தேவையான மருந்து வகைகளும் இல்லை.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் நடக்கும் கஷ்டங்களைப் பார்த்து எல்லாரும் சலித்து விட்டார்கள். முற்போக்கு அரசாங்கம், தீர்வு என்றெல்லாம் கதை எடுக்க முடியாது. எல்லாவற்றையும் பொறுக்கும் மனிதன், தனது பிள்ளைகள் மானபங்கப்படுவதைச் சகிக்க மாட்டான். வாழ்க்கையைப் பத்திரமற்ற தாய் வைத்துக்கொண்டு பிறகு செய்யப்படும் சால்ஜாப்புகள், மானோடும் ஓடிக்கொண்டு வேட்டைக்காரனோடும் துரத்திக் கொண்டிருக்கும் கதைதான்.

படையினர் திரும்பவும் தாங்கள் யார் எனக் காட்டத் தொடங்கிவிட்டார்கள். முன்பு தாங்களே ரோட்டுக் கரைகளை சுத்தம் செய்தவர்கள், பத்தைகளை வெட்டி மரங்களை வெட்டி வேலிக்கிளைகளை வெட்டி, நிற்கும் இடங்களைத் துப்புரவாக்கியவர்கள், இப்போது மக்களை இம்சைப்படுத்தி மக்களைக் கொண்டு செய்விக்கிறார்கள்.

இதுவரை ஐந்தரை மாதங்கள் முடிந்துவிட்டது. மீளக் குடியமர்ந்த மக்களுக்கு நிவாரணத்தைத் தவிர வீடு திருத்துவதற்கோ வேறு கொடுப்பனவோ, தொழில் இழப்பீடோ எந்தவித உதவியும் செய்யவில்லை. ஆசை வார்த்தைகளிலும் பசப்பு வார்த்தைகளிலுமே காலம் போய்க் கொண்டு இருக்கின்றது.

மேலும், மொழி உரிமை மொழிக்கு சம உரிமை என்றெல்லாம் சொல்கிறார்கள். நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. உதாரணத்திற்கு, உயர்கல்வி தொழில்நுட்ப பயிற்சி நெறிகளில் அனுமதிக்கப்படுவதற்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் பரீட்சார்த்திகளுக்கு தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதுவும் 23.08.96ம் திகதிக்கு முதல் நேர்முகப் பரீட்சைக்கு வருகை தருமாறு 12.08.96 அனுப்பிய கடிதம் 04.10.96ல் கிடைத்துள்ளது. இவர்கள் எல்லோரும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பை இழந்துள்ளார்கள். இப்படித்தான் இருக்கிறது மொழியுரிமை!

> யாழ்ப்பாண மக்கள் அரசாங்கத்திடம் சோடாவும் கேட்கவில்லை, வெள்ளைப் பச்சை அரிசி நிவாரணத்தையும் கேட்கவில்லை. அவர்கள் தங்கள் மண்ணில் நிம்மதியான வாழ்க்கையைத்தான் கேட்கிறார்கள்.

தமிழ்க் கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் (மற்றவர்களிடமிருந்து மக்கள் மீண்டுள்ள நிலைமையில்) சரியாக நடந்துகொள்ள வேண்டும். நான் முதல் அனுப்பிய கடிதம் எல்லோருக்கும் வாசித்துக் காட்டி நடவடிக்கை எடுத்ததாக எழுதி இருந்தீர்கள். அதுபோல் இதற்கும் விரிவாக ஆராய்ந்து பதில் எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். ரஜினிக்கு நடந்தது இங்கு இனி எந்த ஒரு பெண்பிள்ளைக்கும் நடக்கக் கூடாது. பத்திரிகைகளில் எல்லாம் எழுதி பாராளுமன்றம் வரை பிரச்சினை கொண்டுசெல்லப்பட வேண்டும். அதற்காகத்தான் அதன் விபரங்களை விரிவாக எழுதியுள்ளேன். நடந்து முடிந்தது முடிந்ததாக இருந்தாலும் இனிமேல் நடக்காமல் இருக்கட்டும்....

இப்படிக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து விசு

படிப்பகம்

# பௌத்த தேரோவும் பல்கலைக் கழக ஆசானும்



பேராசானுக்கு விருதுசூட்டி மகிழும் பெருந்தலைவன்.

நன்றி : "களத்தில்"

"நான் ஆயுதப்படைகளுக்கு ஆசி வேண்டி பூஜைகள் நடத்தவில்லை; தேசிய பாதுகாப்பு நிதிக்கு நிதி சேர்க்க முன்நிற்பதில்லை. ஏனெனில் ஆயுதம் தரிப்பது வன்முறைக்காக.... எமது சகோதர மக்களுக்கு எதிராக!"....

"புத்த பகவான் வன்முறையை ஆதரிக்கவில்லை. அவர் ஒரு பகுதி மக்கள் மீது மட்டும் அன்பு செலுத்துமாறு கூறவில்லை. எனவே புத்தரின் போதனையை மக்களுக்கு போதிப்பதற்காக முன்வந்துள்ள நாம் எவ்வாறு சிங்கள மக்கள் சார்பாகவும் புத்த சமயம் சார்பாகவும் மட்டும் பேச முடியும்? எவ்வாறு யுத்தத்தை ஆதரிக்க முடியும்?"

இவ்வாறு சுற்றிவளைக்காமல் தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார் பௌத்த துறவி ஒருவர்.

சிங்களமக்களும் பௌத்த பிக்குமார்களும் தமிழர்களுக்கு எதிரானவர்களா என்பதை நேரடியாகவே கேட்டு அறிவதற்காக தேசிய சமாதானப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே பௌத்த பிக்கு இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் இவ்வாறு தமது கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்கக் கூடிய சூழல் இல்லாதிருப்பதனாலேயே நாம் பல பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்நிலையில் 'அத்தகைய ஒரு சூழலை ஏற்படுத்துவதற்காக உழைப்பவர்களை காண்பதும் அரிதாகவேயுள்ளது.

அவ்வாறானதொரு சூழல் இல்லாதவரை தமிழ் மக்களது போராட்டம் சரியானெதாரு திசைவழியில் நகர்வதும் இலக்கை எய்துவதும் சாத்தியமா என்ற கேள்விதான் நம்முன் எழுந்து நிற்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்ற வெகுஜன அமைப்புக்கள் போன்று, தமிழ் மக்கள் மத்தியில் வெகுஜன அமைப்புக்கள் இல்லை. தமிழர் தரப்பில் வெகுஜன அமைப்புக்கள், மாற்றுப் பத்திரிகைகள் என்று எம்மால் அறியப்படுபவை அனைத்துமே, வடக்கு கிழக்கிற்கு வெளியே தென்னிலங்கையில் காணப்படும் குறைந்தபட்ச ஜனநாயக சூழலிலேயே உயிர் வாழ்பவை; தப்பிப் பிழைத்திருப்பவை.

வடக்கு கிழக்கிலிருந்து வெகுஜன அமைப்புக்களின் பேரால் மகஜர்களும் கோரிக்கைகளும் முன்வைக்கப்படுகின்ற போதும், அவை உண்மையில் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புக்களாகவே செயற்படுகின்றன. விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளையே எதிரொலிப்பவையாகவும் உள்ளன.

தமிழ் மக்கள் தமது அபிப்பிராயங்களை, உள்ளக் கிடக்கைகளை சுதந்திரமாக வெளியிடவோ அதனடிப்படையில் செயற்படவோ இயலாத நிலையிலேயே இருந்து வருகிறார்கள். இது சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் இருக்க வேண்டிய சமூக அக்கறையை மழுங்கடித்து விடும் என்பதை நாம் எமது அனுபவத்திலேயே கண்டு கொண்டிருக்கிறோம்.

தமிழ் மக்கள் மத்தியில் அபிப்பிராயம் சொல்லுகின்ற புத்திஜீவிகள், அறிஞர்கள், பிரமுகர்கள் எனப்படுவோரும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை, வழிமுறைகளை கேள்விக்குள்ளாக்கும்-விமர்சிக்கும் திராணியற்றவர்களாகவே காணப்படுகிறார்கள்.

தமிழ் இயக்கங்கள் தவிர, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை வெளிப்படையாக விமர்சிப்பவர்களைக் காண்பது அரிதாகவே உள்ளது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் ஊடாக அரசியல் தீர்வுகாண வேண்டும் என்று கூறுபவர்கள் கூட இது விடயத்தில் விடுதலைப்புலிகள் பங்கை குறிப்பிடத் தவறி விடுகிறார்கள்.

தனியே சந்தித்துப் பேசும்போது ஒருவிதமாகவும், மேடையில் நாலுபேர் முன்னிலையில் பேசும்போது வேறு விதமாகவும் கருத்து தெரிவிப்பவர்களும் உண்டு.

இன்னும் சொல்லப் போனால் பலர் பலமான பக்கத்தில் தம்மை இனங்காட்டிக் கொள்வதையே பாதுகாப்பு எனவும் சௌகரியம் எனவும் எண்ணிச் செயற்படுவதாகவே தோன்றுகின்றது.

பொதுமக்களின் பின்னால் செல்லாது, பொதுமக்களுக்கு வழிகாட்டி அவர்களை சரியான திசைவழியில் அழைத்துச் செல்வதே முதன்மைச் சக்திகளின் பணி. அதுவே கஷ்டமானதுமாகும்.

விடுதலைப் புலிகளை விமர்சிப்பது ஏனைய இயக்கங்களுக்கு சாதகமாகப் போய்விடும் என்று மௌனம் சாதிப்பவர்கள், வெகுஜன அமைப்புக்கள் சுதந்திரமாக செயற்பட குரல் கொடுத்துப் பார்க்கலாமே.

# வடகிழக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழு




வடக்கு கிழக்கில் சிவில் அலுவல்களைக் கொண்டு செல்வதற்கு ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்படுவது பற்றி ஜனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்துள்ளது.

மற்றைய மாகாணங்களில் மாகாண சபைகள் செயற்படும்போது இங்குள்ள செயலற்ற நிலையை நிவர்த்திக்கவே ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படுவதாக மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதன் உண்மையான உள்ளடக்கம், யுத்தத்தை முழுமூச்சாக நடத்தும்போது ஏற்படக் கூடிய அகதிகள் பிரச்சினை, மற்றும் பாதிக்கப்படும் நாளாந்த அலுவல்களைக் கவனிப்பதற்கான கண்துடைப்பு நடவடிக்கையெனவே கருத வேண்டியுள்ளது.

ஏற்கனவே வடகிழக்கில் இராணுவ நிர்வாகமே நடைபெறுகிறது. சிவில் நிர்வாகம் என்பது பெயருக்குத்தான். வடகிழக்கில் எந்த மாவட்டத்திலும் பிரிகேடியர்தான் சகல அதிகாரமும் கொண்டவர். அகதிகளைப் பராமரித்தல், அகதி முகாம்களுக்குள் சென்று வருதல் எல்லாமே இராணுவத்திடம் - அரச காவல் துறையிடம் அனுமதி பெற வேண்டிய விடயங்களாகி விட்டன.

வடகிழக்கின் உற்பத்தி நடவடிக்கைகள் ஏறத்தாழ ஸ்தம்பித நிலையை அடைந்துவிட்டன. யுத்தம் அகதிகளை வெள்ளமெனப் பெருக வைத்துள்ளது.

அகதிகளுக்குரிய உலர் உணவு வழங்கல், வரட்சி நிவாரண நிதி என்பனவெல்லாம் மந்த கதியிலேயே நடைபெறுகின்றன. வரட்சி நிவாரண நிதி வடகிழக்கின் எந்தப் பகுதிக்கும் வழங்கப்படவில்லை. ரிவிரச–2 இன் போது இடம்பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு விட்டது. யாழ்ப்பாணத்தில் உணவு வழங்கவே சிரமசாத்தியமான காரியமாயிருக்கையில், அங்கு புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதாக அரசு கூறிக்கொள்கிறது.

அங்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் 'சதோச'விற்கு வெளியே கள்ளச் சந்தைகளில் விற்கப்படுகிறது. உதாரணமாக பச்சைச் சம்பா 'சதோச'வில் 26ரூபா, வெளிச் சந்தையில் 38ரூபா இதனை சாட்சாத் படையினரேதான் மேற்கொள்கிறார்கள்.

இதேபோல் மட்டக்களப்பின் வடபகுதிக் கிராமங்களிலும் காணப்படுகிறது. திருமலையில் தமிழ் மக்கள் தமது சொந்தக் காணிகளிலேயே திரும்பக் குடியேற முடியாத நிலை நிலவுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வும், அதன் அடிப்படையிலான நிர்வாகமுமே ஏற்புடையது.

அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்ட யோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக் குழு மற்றும் வெளிக் கருத்தரங்குகள் எல்லாவற்றிலும் இழுபட்டுக் கொண்டிருக்கையில், இந்த ஒருங்கிணைப்புக் குழு பற்றி அறிக்கை ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்டுள்ளது.

தீர்வுத் திட்ட யோசனைகள் அமுல்படுத்தப்படலாம் என்பதில் நம்பிக்கை இழந்ததும், நீண்டகால யுத்த நோக்கமுமே இந்த ஒருங்கிணைப்புக் குழு யோசனைகள் உருவாவதற்கு காரணமாயிருந்திருக்கலாம்.

இதேவேளை சில தமிழ் கட்சிகள் இடைக்கால நிர்வாக சபையொன்றைக் கோரி நிற்கின்றன. இது ஒரு தவறான நிலைப்பாடாகும். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பற்றிய கருத்துக்கள் சகல முனைகளிலும் வலியுறுத்தப்பட்டிருக்கையில், இத்தகைய கோரிக்கைகள் பின்னடைவுகளுக்கும் திசை திருப்பல்களுக்கும் வழிவகுக்கலாம்.

சீழ்பிடித்த புண்ணுக்கு மிகத் தீவிரமான சிகிச்சை தேவைப்படுகிறது. வெறும் பூச்சு மருந்தல்ல.

எது எப்படி இருப்பினும், முக்கியமான தீர்க்கமான வரலாற்றுக் காலகட்டமொன்றைக் கடந்து கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில், தமிழ் அரசியல் சக்திகள் புத்திசாலித்தனத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

அத்தோடு புனர்வாழ்வு அமைச்சர், மாகாணக் கவர்னர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் அடங்கிய இந்த ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம் எதனையும் மேற்கொள்ள முடியாத கூட்டுக் கதம்பமாகவே இருக்க முடியும்.

யுத்தத்திற்கு இசைவுபட சிவில் நிர்வாகத்தை அமைப்பது என்பதற்குப் பதிலாக, யுத்தம் முடிவுக்கு வருவதும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வினை முன்வைப்பதும் முக்கியமான விடயமாகும். ●

## அடையாளம்

அடையாளம் - அப்படி ஒன்றும் அகரமுதலியிலிருந்து நீக்கப்பட வேண்டிய அசிங்கமான,
கேவலமான கெட்ட வார்த்தையல்ல தவறாமல் இருக்க வேண்டியது. நாம்
விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நமக்கு அடையாளங்கள் இருக்கின்றன;
சொல்லப்படுகின்றன.

முகமும் முகவரியும் இல்லாமல் போவதில் உள்ள சோகத்தைப் பற்றிப் பேசுகிறோம்.
'அனாதை'யாவது யாருக்கும் உவப்பாகாது.

அடையாளம் - மரபு - வெறும் மயிராகக் கூட இருக்கலாம். இதனைத் தலையில்
சுமப்பது சிறுமை ஆகாது. அடையாளங்களை இழப்பதால் உண்டாவது வெறுமை.
'உரியவை' என்று ஒருவருக்கு இருக்கும்போதுதான் ஒருவர் இருப்பதே உறுதியாகிறது.
இருப்புக்கே பொருள் உண்டாகிறது. இருப்பு முழுமை பெறுகிறது.

சாதி, மதம், இனம், மொழி என்று பேசுவது - மீண்டும் சொல்லலாம் - அநாகரிகந்தான்.
ஆனால் நாம் அவாவும் மனிதகுல பரிணாம வளர்ச்சியில் - இக் காலகட்டத்தில்,
இவற்றை நியாயப்படுத்துகிற அளவுக்கு இவற்றில் நியாயம் இருக்கிறது என்பதை
மறுப்பதற்கில்லை. வெறும் நியாயப்படுத்துகிற அளவுக்குத்தான்! மனிதனுக்கு நியாயத்தைப்
பெற அதனை நியாயப்படுத்த வேண்டியிருக்கிறது.

- த. பழமலை

www.padippakam.com



# யாருடைய கட்டுப்பாட்டுக்குள்ளிருந்தாலும் மனித உரிமை மீறல்களே இங்கு மாறாத விதி



தற்போது அரச கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா தெருக்களில் பிணங் காணப்படுவது ஒரு வழமையான விடயமாகி விட்டது. சில தினங்களுக்கு முன்னர் வவுனியா இராசேந்திரங்குளம் என்ற இடத்தில் 3 பேர் கைகள் பின்புறமாக கட்டப்பட்ட நிலையில், நெற்றியிலும் கன்னத்திலும் துப்பாக்கிச் சன்னத் துளைகளுடன் பிணமாகக் கிடந்தார்கள்.

திருமலையைச் சேர்ந்த நகை வியாபாரி ஒருவருடைய கடையில் வேலை செய்பவர்களும், வான் சாரதியுமே அவர்கள் என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் சாரதி முன்னர் இராணுவத்துடன் சேர்ந்து செயற்பட்டவர் என அறியப்படுகிறது.

இச் சம்பவம் நடந்து ஒருநாள் கழித்து இன்னுமொருவருடைய பிணம் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்திற்குப் பின்புற வீதியிலுள்ள கால்வாய்க்குள் கன்னத்தினூடு சன்னம் பாய்ந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா இந்த இலட்சணத்தில் இருக்க, கிளிநொச்சியை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வவுனியா படைத் தளத்திலிருந்து ஹெலிகொப்டர்களும், விமானங்களும் உறுமிச் செல்கின்றன.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தினுள் ஆட்கள் காணாமல் போவதும், வெள்ளை வான் திரிவதும் நடைபெறுகிறதாம். கற்பழிப்புச் சம்பவங்கள், மர்மக் கொலைகள், காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலவரம் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச் செல்ல முயலும் மக்களுக்கு தயக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது எனக் கருதப்படுகிறது.

## மருதமுனைப் படுகொலைகள்

திரௌபதை அம்மன் கோவில் திருவிழாவிற்கு வந்த முஸ்லீம் ஊர்காவல் படையினர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து திருவிழா பார்த்து விட்டு லொறியொன்றில் வீடு திரும்பிய பொதுமக்கள் மருதமுனையில் வைத்து தாக்கப்பட்ட சம்பவமானது முஸ்லீம் – தமிழ் உறவை சீர்குலைக்க முயலும் சக்திகளாலேயே முடுக்கிவிடப்பட்டன என்பதில் எதுவித ஐயமுமில்லை.

சாதாரண மக்களைப் பலிக்கடாக்களாக்கி அதில் குளிர்காய்ந்து அரசியல் லாபம் பெறுவதென்பது இன்று நேற்று ஆரம்பித்த விடயமல்ல.

1984இல் ஜிகாத் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆங்காங்கே இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றன. ஆரம்பத்தில் தமிழ் விடுதலை இயக்கங்களில் நிறையவே முஸ்லீம் இளைஞர்கள் இணைந்து செயற்பட்டார்கள். பல முஸ்லீம் வீடுகள் போராளிகளின் தலைமறைவு இடங்களாகவும் ஆதரவு நல்கும் இடங்களாகவும் இருந்திருக்கின்றன.

அதற்கு முன்னர் 1981இல் காலியில் முஸ்லீம்கள் தாக்கப்பட்டபோது, புத்தளம் பள்ளிவாசலில் தொழுகையிலீடுபட்ட முஸ்லீம்கள் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டபோதெல்லாம் அந்தச் சம்பவங்களை தமிழர் இயக்கங்கள் தயவு தாட்சணியமற்ற முறையில் கண்டித்திருக்கின்றன.

ஆனால் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த 80 களின் மத்திய பகுதியில் தமிழர் இயக்கங்களுக்கும் முஸ்லீம்மக்களுக்குமிடையே இடைவெளி ஏற்பட்டது என்பது கசப்பான உண்மையாகும்.

இதில் 84, 85 காலப் பகுதியில் 'மொசாட்'டும் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்தது என்பது பகிரங்க ரகசியம். இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு இலங்கையில் திறக்கப்பட்டதும், அதற்கெதிராக தமிழ், முஸ்லீம் மக்கள் இயக்கம் நடத்தியதும் வரலாறு.

'ஒருவனுடைய நண்பனைப் பார்த்து அவனை அறிந்துகொள்' என்ற அரபுப் பழமொழியும் அந்த நேரத்தில் ஞாபகப்படுத்தப்பட்டது.

ஆனால் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலை, யாழ் முஸ்லீம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை முஸ்லீம்–தமிழ் உறவில் ஆழமான பிளவுகளை ஏற்படுத்தியது.

இத்தகைய சூழ்நிலை, முஸ்லீம்களின் தனி அடையாளத்தை பிரதிநித்துவப்படுத்தும் கட்சிகள் உருவாவதற்கு வழிவகுத்தது.

தமிழர்கள் சிங்களவர்களால் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்பட்ட நிலையில், தமிழர் அரசியல் இயக்கங்களின் தோற்றம்–வளர்ச்சி ஏற்பட்டது போன்று, தமிழர்களால் தாம் பாரபட்சமாக நடத்தப்படுகிறோம் என்ற உணர்வு நிலையும், சிங்களப் பேரினவாதத்தினால் ஒடுக்கப்படுகிறோம் என்ற உணர்வுநிலையும் முஸ்லீம் அரசியல் இயக்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நிலைக்கு இட்டுச் சென்றது.

ஆனால் மிக அண்மைக்காலம் வரை இனக் குரோத உணர்வுகளை உண்டாக்கும் பிரச்சினைகள் எதுவும் நடைபெறவில்லை. தற்போது மருதமுனையில் நடந்த சம்பவம் மறைந்து கொண்டிருக்கும் குரோதங்களை சில விஷம சக்திகள் தூபம் போட்டு வளர்க்க முற்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

இதனை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் பாரிய அனர்த்தங்களை தமிழ், முஸ்லீம் இரு சமூகங்களுமே சந்திக்க வேண்டியிருக்கும்.

வடகிழக்கில் முஸ்லீம் மக்களினது பிரச்சினைகளின் தீர்வு, தமிழ் மக்களின் தீர்வுடன் பின்னிப்பிணைந்தது. கயிறு திரித்ததுபோல் வாழும் சமூக யதார்த்தத்தில் ஒன்றைப் புறக்கணித்து ஒன்றைச் செய்ய முடியாது.

கிழக்கில் தமிழர்களின் காணிகள் முஸ்லீம் கிராமங்களுக்கண்மையிலும், முஸ்லீம்களின் காணிகள் தமிழர்களின் கிராமங்களுக்கண்மையிலும் காணப்படுகின்றன. பாடசாலை, தெரு, வீடு என கலந்து வாழ்கின்றனர்.

எனவே முஸ்லீம்களும் தமிழர்களும் சேர்ந்தே வாழ்வதென்பது வரலாற்று விதி. ஒட்டிப் பிறந்த இரட்டையர்களின் வாழ்வைப் போன்றது அது. இதில் ஒன்று, ஒன்றுக்குச் சேதம் விளைவிப்பது முழு தமிழ், முஸ்லீம் சமூகத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, இலங்கையில் பல இனங்கள் சேர்ந்து வாழும் தன்மையை உறுதி செய்யும் தீர்வைக் காண்பதற்கு சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ●



## தலிபான் கெரில்லாக்கள்

தலிபான் கெரில்லாக்கள் காபூல் நகரைக் கைப்பற்றிய பின் காட்டுமிராண்டி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். பெண்கள் வீடுகளுக்கு வெளியே நடமாடுவது தடை செய்யப்பட்டுள்ளது. முழுதாக மூடாத உடையுடன் வீதிகளில் நடமாடும் பெண்கள் பகிரங்கமாக தாக்கப்படுகிறார்கள். வேலைக்கு செல்வது பாடசாலைகளுக்குச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்ற அடிப்படைவாதக் கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

முன்னாள் சோவியத் ஆதரவு ஜனாதிபதி நஜிபுல்லா, ஐ.நா. காரியாலயத்தினுள் வைத்து கொல்லப்பட்டு பகிரங்கமாக தொங்க விடப்பட்ட அநாகரிகம் நடந்தது. அண்மைக் காலத்தில் ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்தவர்களுள் சற்று முன்னேற்றகரமான கொள்கைகளைக் கொண்டவர் இவர். முன்னாள் சோவியத் யூனியனின் ஆதரவுடன் பதவியிலிருந்த இவர் 1990 கிளர்ச்சியைத் தொடர்ந்து பதவியை விட்டு அகற்றப்பட்டார்.

ஆப்கானிஸ்தானின் பல்வேறு கிளர்ச்சி குழுக்களும் பல்வேறு இஸ்லாமிய நாடுகளின் உதவியுடன் இயங்கின. தற்போது ஆட்சியைக் கைப்பற்றி இருக்கும் தலிபான் குழு தீவிர மத அடிப்படைவாதமும் பாகிஸ்தானிய நலன்களுடன் தொடர்பான குழுவாகும்.

இந்தக் குழுவின் ஆட்சிக் கைப்பற்றல் இந்தியாவின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் எனக் கருதப்படுகிறது. காஷ்மீரில் தேர்தல்கள் நடந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் ஆப்பானிஸ்தானில் தலிபானின் வெற்றி புதிய தலையிடியாக உருவாகலாம். ஏற்கனவே காஷ்மீரிய பகுதிகளில் ஆப்கானிய கிளர்ச்சிவாதிகளின் ஊடுருவலும் உண்டு எனக் கருதப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் சர்வதேச ஆயுத, போதை வஸ்து வியாபாரிகளுக்கும் ஒரு முக்கியமான மையமாகும். போதைவஸ்து, ஆயுத வியாபாரம் போன்றவற்றால் சீரழிந்திருக்கும் ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி, அறியாமை இருள் சூழ்ந்த யுத்த அலைக்குள் சிக்கித் தவிக்கும் அந்த நாட்டுக்கு மட்டுமல்ல சுற்றிவர உள்ள நாடுகளுக்கும் அச்சுறுத்தலாகும். தலிபான்கள் பதவிக்கு வந்த பின்னர் ஆயிரத்திற்கு மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

## விவியன் குணவர்த்தன



இலங்கையின் இடதுசாரி இயக்கத்திற்கும் இவரது அரசியல் வாழ்விற்கும் ஒரே வயது. யுத்தத்திற்கு ஆதரவு வேண்டி பிரிட்டிசார் இயக்கம் நடாத்தியபோது யுத்தத்திற்கெதிராகவும், அன்று பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்ட மலேரியாவை ஒழித்துக் கட்டுவதற்காகவும் சூரியமல் (சூரியகாந்திப் பூக்கள்) இயக்கத்தை நடாத்தினார்கள். அதில் விவியன் ஒரு தீவிர பங்காளியாக இருந்தார். முதலாம் உலக மகா யுத்தத்திற்கெதிராக றோஸா லக்சம்பேக் வகித்த பாத்திரத்திற்கு ஒப்பிடக்கூடியது விவியனின் யுத்த எதிர்ப்பு பாத்திரம்.

இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான விவியன் குணவர்த்தன, காலஞ்சென்ற இடதுசாரித் தலைவர்கள் கொல்வின், எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, என்.எம். பெரேரா போன்றவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர். மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும், இலங்கை துறைமுகம், ரயில்வே தொழிலாளர்கள் மத்தியிலும் வேலை செய்தவர். குறிப்பாக, மத் கலாசார ரீதியான பெண் அடக்குமுறை நிலவிய எமது சமூகத்தில், பெண் ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடிய ஒரு முதுபெரும் போராளி.

ட்றொட்ஸ்கியின் 'நிரந்தரப் புரட்சி' என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்த அவர், பம்பாய், கல்கத்தா பகுதிகளிலும் தொழிலாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். இலங்கைப் பாராளுமன்றத்தினுள்ளும் வெளியிலும் பல தொழிலாளர்கள், பெண்கள் சார்ந்த போராட்டங்களில் ஈடுபட்டவர்.

இலங்கையில் ஜனநாயக உரிமைகளை, மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காக வீதியிலிறங்கிப் போராடி, பொலிஸ் அடக்குமுறைகளைச் சந்தித்தவர். சிறை வாழ்க்கையை அனுபவித்தவர்.

இலங்கையின் மானிடவாழ்வில் தார்மீக நெறிகளை நிலைநாட்டுவதற்காக தன் வாழ்நாள் பூராவும் செயற்பட்டுள்ளார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# இறைமையைக் காப்பாற்ற இராணுவம்தான் கதியென்றால் மக்களைக் காப்பாற்ற என்ன வழி?

# இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர முடியுமா?

அரசுக்கும் புலிகளுக்குமான போரில் தற்சமயம் அரசு யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பிடிக்கும் சண்டையை (The Battle for Jaffna) வென்றிருக்கலாம். ஆனால் முழு ஈழப் பகுதிகளையும் புலிகளிடம் இருந்து மீட்கும் போரை வெல்லவில்லை.

அதற்கு இன்னும் பல யுத்தங்கள் புரியவேண்டிய நிலையிலேயே அரசு உள்ளது. உதாரணத்திற்கு "வன்னிக்கான யுத்தம்", அதேபோல் "கிழக்கு மாகாணத்திற்கான யுத்தம்" எனத் தொடரலாம்.

ஆனால் உண்மையான வெற்றி என்பது ஜனநாயகம், சம உரிமை, சமாதானம் என்பவற்றை பேச்சுவார்த்தை மூலம் கொண்டு வருவதுதான்.

அரசோ, தேர்தல் காலங்களில் கூறியதை மறந்து யாழ்குடாநாட்டை ஆயுதமுனையில் கைப்பற்றியதை, யாழில் சிங்கக் கொடியேற்றியதன் மூலமும், அந்த வெற்றியை சிங்களப் பகுதிகளில் கொண்டாட அனுமதித்ததன் மூலமும், அரசாங்கம் அதைத் தாமும் கொழும்பில் கொண்டாடியதன் மூலமும் தமிழ் மக்களை ஓர் அன்னியர் போலவும் ஈழப் பகுதியைப் பிடித்ததை ஓர் அண்டை நாட்டைப் பிடித்தது போலவுமே நடந்து கொண்டுள்ளார்கள்.

## வெற்றி என்பது தீர்வில் உள்ளது

ஓர் சரித்திர ஆசிரியர் (FREDIKLE 1995) கூறுவதுபோல், 'ஒவ்வொரு போரும் கட்டாயமாக ஓர் முடிவுக்கு வர வேண்டும். போரில் ஒரு பகுதி யுத்தத்தை வெல்வது போரை வென்றதாகி விடாது' என்கிறார்.

உதாரணத்திற்கு அரசு புலிகளுடனான போரை வென்றதாகக்கூறுமானால், ஜேர்மனி உலகச் சண்டை இரண்டையும் (W.W-1 & W.W-2) வென்றதாகக் கூறலாம். அதேபோல் ஜப்பான் பேள் துறைமுகத்திற்கு (Perl Harbour) குண்டுபோட்டு அழித்தவுடன் அமெரிக்காவை வென்று விட்டதாகக் கூறியிருக்கலாம்.

ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. போர் முடிவில் பேச்சுவார்த்தை மூலம் ஓர் சமாதான நிலையைக் கொண்டுவந்தார்கள்.

எனவே தற்போதையஅரசு யாழ் குடாநாட்டு வெற்றியோடு, அந்த வெற்றிக் களிப்பில் தேர்தல் காலத்தில் கூறிய யாவற்றையும் மறக்குமானால், அந்த வாக்குறுதிகளில் இருந்து விலகுமானால், தொடர்ந்து யுத்தம் புரிந்து 'நாம் எல்லோரும் ஓரினம், ஒருநாடு' என்று கூறும் அரசு, ஒரு பகுதி தேசிய இனத்தை அழித்து மிகுதிப்பேரை தமக்கு அடிமைகள் போல் நடாத்த முயல்வார்களேயானால்.... இந்த யாழ்குடாநாட்டு யுத்த வெற்றி மிக வேகமாக வலுவற்றதாகி அரசுக்கெதிராக மக்களை எழுச்சி கொள்ள வைக்கும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

## யுத்தத்தின் முடிவு மற்றுமொரு யுத்தம்

அரசினரது யாழ் குடாநாட்டு வெற்றியும் அதைத் தொடர்ந்த சிங்கக் கொடியேற்றமும், தொடர்ந்து சிங்கள மக்களின் வெற்றி விழாக்களும், அரசின் வெற்றி விழாக் கொண்டாட்டமும், ஓர் காலத்திற்கு முந்திய நிகழ்ச்சியாகவும் (Premature), அறிவற்ற ஆரோக்கியமற்ற நிகழ்ச்சியாகவுமே இருக்க முடியும்.

எனவே ஒரு சில யுத்தங்களின் வெற்றிகள் ஈழப் போரையே வென்றதாகிவிட முடியாது. உண்மையான போரின் வெற்றி என்பது தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட்டு, ஓர் ஜனநாயக – சம உரிமையுள்ள – சமாதானமான ஆட்சி ஒன்று அமைத்து அதை நடைமுறைப்படுத்த வேண்டும் அப்போதுதான் அது வெற்றியாகும்.

தமிழ் சிங்கள மக்கள் இரு பகுதியினருமே இணைந்து கொண்டாடும் வெற்றிதான் உண்மையான வெற்றியாகும். இன்றேல், சில யுத்தங்கள் அரசால் வெல்லப்பட்டாலும் போர் வேறு வேறு கோணங்களில் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

கடந்த சித்திரை 19, 1995ல் புலிகள் அரசுடனான பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு, அதனால் வரும் அழிவுகளைப் பற்றி சிந்திக்காது தமது யுத்தத்தை திரும்பவும் ஆரம்பித்தனர் (அதன் விபரம் யாவரும் அறிந்த ஒன்று).



## மக்களை விரட்டி மாவீரர் ஓட்டம்

கடந்த 13 வருடப் போராட்டத்தில் ஏறத்தாழ 50,000 மக்கள் இறந்துள்ளதாக பல உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன.

புலிகளின் பேச்சுவார்த்தை முறிப்போடு ஆரம்பமான போராட்டத்தில், புலிகள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி, நின்று போராடாது பின்வாங்கினர்.

மண்மீட்பு நிதி, தமிழீழப் பாதுகாப்பு நிதி, என்று மக்களிடம் பண வசூல் செய்ததோடு, மக்கள் பாதுகாப்பு நிதி என்றெல்லாம் பாமர மக்களையும் சுரண்டிக்கொண்டிருந்தவர்கள், சிறிலங்கா இராணுவம் தமது யுத்தத்தை ஆரம்பிக்க முன்னமே புலி முக்கியஸ்தர்கள் எல்லோரும் பரிவாரங்களோடு வன்னிக்கு மாறினார்கள்.

யாழ் குடா நாட்டை பாதுகாக்கும் பொறுப்பு சில பாலகர்களிடம் விடப்பட்டது. அதோடு புலிகள், தாம் இராணுவத்தோடு கடும் யுத்தம் நடாத்த இருப்பதால் மக்களையும் 24 மணி நேரத்துள் வலிகாமத்தை விட்டு வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்கட்கு பலாத்காரமாக கலைத்தனர்.

இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் றுவாண்டா நாட்டிலிருந்து விரட்டப்பட்ட மக்களிலும் பார்க்க, பொஸ்னியாவில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களிலும் பார்க்க கேவலமான நிலைக்கு புலிகளால் தள்ளப்பட்டனர்.

## வரலாற்றில் இல்லாத பெயர்வு

இதன் தொடர்ச்சியாக புலிகள் யாழ் மக்களுடைய வீடுகள் யாவற்றையும் கொள்ளையிட்டதோடு, யுத்தத்தில் 80வீதத்திற்கு அதிகமான வீடுகள் மோசமாகப் பதிப்படைந்தது. சரித்திரத்தில் இல்லாத்வாறு யாழ் மக்கள் முழுப்பேரையுமே அகதிகளாக்கி ஒட்டாண்டியாக்கிய பெருமை புலிகளுக்கே உரியதாகும்.

இந்த அழிவுகளை ஈடு செய்யப் போவது யார்? மக்கள் திரும்பவும் தாமே இவற்றைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் உள்ளனர். இதற்கு புலிகளோ அரசோ உதவப் போவதில்லை.

அரசோ வெளிநாட்டு உதவிகளை தமது பகுதிக்கும் இராணுவத்திற்குமே செலவு செய்கிறது. வெளிநாடுகளும் ஈழத்தின் நிவாரண வேலைக்கு பெருமளவில் உதவப் போவதில்லை. காரணம் அவர்கள் இதை ஓர் உள்நாட்டு யுத்தமாகவே பார்க்கின்றனர். இதனால் ஈழ நிவாரணத்திற்கென்று வெளிநாட்டு உதவி மிகக் குறைவாகவே கிடைக்க வாய்ப்புண்டு.

## மறுபடியும் பழைய மன்னர் காலத்திற்கு

ஆனி90ல் பிரேமதாசா அரசின் காலத்தில் புலிகள் தமது போரை ஆரம்பித்ததில் இருந்து தை 95ல் சந்திரிகா அரசோடு பேச்சுவார்த்தை ஆரம்பித்த வரை 150,000க்கும் அதிகமான மக்கள் வட கிழக்கில் இருந்து அகதிகளாக கொழும்புக்கும், அதன் சுற்றாடலுக்கும் வந்துள்ளனர். இப்போது முன்னொருபோதும் இல்லாதவாறு பெருந்தொகை மக்கள் அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர்.



இந்தக் குறுகிய காலத்தில் (சித்திரை 95–வைகாசி 96) அரசின் சமாதானத்திற்கான யுத்தத்தில், தமிழர்கள், சரித்திரத்தில் இதுவரை நடக்காதவாறு உயிர்க்ளையும் உடமைகளையும் இழந்தனர்.

தேசியத் தலைவர் எனத் தனக்குத் தானே பட்டம் வைத்துக் கொண்ட தலைவர் தமிழ் தேசிய இனத்தை தேசத்தை விட்டே அகதிகளாக விரட்டிய' பெருமையையும் தட்டிக் கொண்டார். அத்தோடு 'யாழ்ப்பாணம் சரித்திரத்தில் பெரிய முக்கிய இடமல்ல, நாம் இனி வன்னியை இராசதானியாக்குவோம்' எனவும் திருவாய் மலர்ந்துள்ளார்.

இதன் அர்த்தம் மீண்டும் மன்னர் கால வரிவிதிப்புக்களோடும், மன்னர்கால விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் கருவிகளோடும் தான் மக்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும் என்பதே.

## குடிக்க நீர் குந்த மண்

24 மணி நேரத்துள் மக்களை வீட்டை விட்டு விரட்டியவர்கள், அம் மக்களுக்கு ஒரு நேர உணவு கொடுக்கவில்லை. ஒரு நேர உணவு கொடுக்க முடியாத இம்மாவீரர்கள் மக்களை மந்தைகளாகவே நடத்தினர். இதை ஒரு பெரியவர் கூறும்போது "புலிகள் இதுவரை எம்மை மந்தைகள் போலவே பாவித்தனர் நாம் இப்போ மந்தைகளாகவே மாறிவிட்டோம்" என்று கூறுகிறார். அதனாலேயே மந்தைகள் போல் விரட்டப்பட்டோம் என்றார்.

புலிகள், அம்மக்களை அவர்களின் வயது, இளமை–முதுமை, காலூனமுற்றவர்கள், பாரிசவாதகாரர், ஆண்–பெண், குழந்தைகள், வயோதிபர் எனப் பாராது யாவரையும் விரட்டிக் கலைத்தனர். இதனால் வழியில் இறந்தோர், போன இடங்களில் இறந்தோர் எத்தனை பேர்?

தற்போது மக்களின் தேவையெல்லாம் புலிகள் கேட்கும் தமிழீழமோ, மற்றவர்கள் கதைக்கும் அரசியல் தீர்வோ அல்ல. தாம் தமது வீடுகளுக்குப் போக வேண்டும்; வெறும் நீரையாவது குடித்துக்கொண்டு சொந்த இடங்களில் அமைதியாக வாழ வேண்டும் என்பதுதான்.

## அரசு–புலிகளிடை பந்தயப் பொருளாக

இந்த நிலையில், புலிகளோ அரசோ மக்களின் மனோநிலையை உணராது, மக்களின் அவல நிலையை தமக்குச் சாதகமாகப் பாவிக்கவே முயல்கின்றனர்.

புலிகள், மக்களையும் மண்ணையும் பாதுகாப்பதாகக் கூறி சரித்திரத்தில் இல்லாதவாறு யாழ் மக்கள் முழுப்பேரையுமே அகதிகளாக விரட்டியதோடு அவர்களது உடமைகள் யாவையும் அழிக்கவும் காரணமாயினர்.

அதேபோல் இந்த அரசும், சமாதானத்திற்கான யுத்தம் என்றும், புலிகளிடம் இருந்து மக்களைப் பாதுகாக்கிறோம் என்றும் கூறி வேறு நாட்டோடு சண்டையிடுவது போல் பலரக நவீன விமானங்களையும் டாங்கிகளையும் பாவித்து தமிழ் மக்களை அழிப்பதோடு, யாழ்ப்பாணத்தையும் தரைமட்டமாக்கியுள்ளனரே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களையும் இலங்கைப் பிரஜைகளாக வாழவைக்க முன்வருவதாகத் தெரியவில்லை.

உண்மையான புரட்சிவாதிகள் என்றால் மக்களின் நலனில் தான் அக்கறையாய் இருப்பார்கள். ஆனால் புலிகளின் சரித்திரத்தில், மக்கள் தமக்கு அடிமைகளாக வாழவேண்டும் என்றே விரும்பினர்.

படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணத்தில் மக்கள் ஒருவரோடு ஒருவர் கதைக்க முடியாதவாறு புலிகளின் காட்டாட்சி இருந்தது.

## சொந்த நாட்டில் அகதியான சோகம்

புலிகள் உண்மையில் மக்களில் அவர்கள்து நலனில் அக்கறையுள்ளவர்களாக இருந்திருந்தால், கடந்த 13 வருட போராட்ட காலகட்டத்தில் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நியாயமாகப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு.

ஆனால் புலிகளோ தமிழ் அரசியல் தலைவர்களை கொலை செய்தார்கள். அதனால் தமிழ் தலைமையே இல்லாமல் போனது. ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்ததன் மூலம் இந்திய ஆதரவையும் உலக நாடுகளின் ஆதரவையும் இழக்க வைத்தனர். சிறிலங்கா அரசோடு இணைந்து ஈ.பி.ஆர்.எல்.எப். ஆதரவாளர்களையும், வடகிழக்கு மாகாண ஆட்சியையும் இல்லாமல் செய்ததோடு தமிழ் தேசிய இராணுவத்தையும் அழித்தனர்.

பின் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா எந்த நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தையை தொடங்கிய போது, கடந்தகால அனுபவத்தை வைத்தாவது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்யக் கூடிய, தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து நிற்கக் கூடியதான ஓர் தீர்வுக்கு வந்திருக்கலாம். ஆனால் முடிவு என்னாச்சு?

புலிகள் அதையும் குழப்பி, தமிழ் மக்கள் பிறந்த நாட்டிலும், பிறநாட்டிலும் தலைகுனிந்து வாழ வேண்டிய நிலையை ஏற்படுத்திய பெருமையையே தட்டிக்கொண்டுள்ளார்கள். இதனால் யாழ் மக்கள் பிறந்த நாட்டிலேயே அகதிகள்.... இராணுவ முற்றுகையுள், ஒருநேர உணவுக்கு கையேந்தும் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

## சரித்திரத்தில் இடம் சந்திரிகாவுக்குண்டா?

வவுனியாவில் இருந்து தமிழர் கொழும்பு வருவது நிற்பாட்டப்பட்டதோடு, கொழும்பிலோ தமிழ் மக்கள் யாபேரும் புலிகளாகவே கருதப்பட்டு தினமும் பலவித நிந்தனைகட்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். பலர் கொலை செய்யப்பட்டு ஏரிகளில் வீசப்பட்டுள்ளனர். பலர் காணாமல் போனதாக செய்திகள் வருகின்றன.

இந்த அரசின் யாழ் குடாநாட்டு முற்றுகையோ அல்லது யாழ் மாவட்ட முற்றுகையோ புலிகளை ஓரளவு பலவீனமாக்கியிருக்கலாம். ஆனால் அரசு தேர்தல் காலங்களில் கூறியது போல் தமிழ் மக்கள் ஆதரிக்கக் கூடிய தீர்வை வைத்து அதை நடைமுறைப்படுத்தாவிடில் இந்த குடாநாட்டு வெற்றி ஓர் தற்காலிகமாகமானதாகவே இருக்க முடியும்.

எனவே அரசு காலம் தாழ்த்தாது ஜனநாயக ஓட்டத்துள் வந்துள்ள தமிழ் கட்சிகள், புலிகள், சில சிங்களக் கட்சிகள், பல அறிஞர்கள் விரும்புவது போல் ஓர் மூன்றாவது நாட்டு உதவியோடு பிரச்சினையை நீண்டகால நோக்கோடு தீர்க்க முன்வர வேண்டும்.

நீதிக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் பிரச்சாரம் செய்த ஜனாதிபதி, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்ப்பேன் என மேடைமேடையாக தேர்தல் பிரச்சாரம் செய்த ஜனாதிபதி, வெளிநாட்டு ஜனநாயக முறைகளை கற்றும் கண்டும் உணர்ந்த ஜனாதிபதி, கடந்தகால ஐக்கிய தேசியக் கட்சி அரசின் இயலாத் தன்மையை விமர்சித்த ஜனாதிபதி இப்போ தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கை சரித்திரத்தில் ஓர் முக்கிய இடத்தை எடுப்பார் என்பதே பல தமிழ் மக்களின் எண்ணம்.


## சயனைட்டும் சண்டித்தனமும்

புலிகள் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் எல்லாவற்றையும், தம்மைப் பலப்படுத்தவும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவுமே பாவித்தார்களே தவிர, மக்களின் அமைதி–ஜனநாயகம் என்பனவற்றிற்காகப் பாவித்ததே இல்லை.

இவர்களின் கடந்தகாலப் பேச்சுவார்த்தைகளைப் பார்த்தோமானால், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி அரசோடு இணைந்து அழித்தார்கள்; வடகிழக்கு இணைந்த ஆட்சியை சிறிலங்கா இராணுவத்தோடு சேர்ந்து அழித்தார்கள்; அதேசமயம் அந்த வடகிழக்கு இணைந்த ஆட்சியை நடைமுறைப்படுத்த உதவிய இந்திய அமைதிப் படையினரோடு மோதினர். அதன்பின் ஐ.தே.க.வுடனான காதலை முறித்துக்கொண்டு சிறிலங்கா இராணுவத்தோடு மோதி பல்லாயிரம் மக்கள் இறக்க காரணமாயினர்.

தொடர்ந்து வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடனான நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையையும் 3 மாதங்களில் முறித்து, யுத்தத்திற்குள் மீண்டனர். இவர்களுக்குத் தெரியும், சமாதான சூழ்நிலையில் தாம் மக்களோடு மக்களாக வாழ முடியாது, சயனைட் தான் கடிக்க வேண்டுமென்று. அதனாலேயே இந்த சண்டித்தனத்தை தொடர்கின்றனர்.

இவர்கள் இந்த பேச்சுவார்த்தையை முறித்ததன் மூலம் உலகிற்கு தாம் ஓர் வெறும் பயங்கரவாத கல



கக்காரர்கள் என்பதை நிருபித்துள்ளார்கள்.

பி.எல்.ஓ.வால், கடந்த 40 வருடத்திற்கு மேற்பட்ட கொள்கைகளை கைவிட்டு தமது மக்களின் நலனிற்கு முக்கியத்துவம் தந்து பல விடயங்களை விட்டுக்கொடுத்து இஸ்ரேலோடு பேச முடியுமானால்,

பொஸ்னிய முஸ்லிம் தலைவர்கள், பல லட்சம் முஸ்லிம் மக்கள் சேபியர்களால் கொல்லப்பட்ட பின்பும் ஓர் கூட்டு பொஸ்னியாவில் வாழ சம்மதிக்க முடியுமானால்,

ஏ.என்.சி. பெரும்பான்மை ஆபிரிக்க மக்கள் சிறுபான்மை வெள்ளையருடன் சரிசமமாக வாழ சம்மதிக்க முடியுமானால்,

எமது தமிழ்த் தலைவர்களால், குறிப்பாக புலிகளால் ஏன் விட்டுக் கொடுத்து பேச்சுவார்த்தையை நடத்த முடியாமல் உள்ளது?

## முயன்றால் முடியாததில்லை

அரசின் முதலாவது அரசியல் திட்டத்திற்கும் இரண்டாவது அரசியல் திட்டத்திற்கும் பல வித்தியாசங்கள் உண்டு. இப்போது இந்த விடயம் பாராளுமன்ற தெரிவுக்குழு முன் விவாதிக்கப்படுகிறது. இங்கு மூன்றாவது கட்டமாக மேலும் சில விடயங்கள் குறைக்கப்படலாம்.

அதன் பின் மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்ற பெரும்பான்மையோடு அது நிறைவேற்றப்பட்டு, பின் மக்களின் கருத்தைப் பெறும் (Referendum) வாக்குக்கு விடப்பட்டுத்தான் சட்டமாக்கப்படும் என்றால் இது நடக்கக்கூடிய காரியமா?



தமிழ் மக்கள் ருவாண்டா நாட்டிலிருந்து விரட்டப்பட்ட மக்களிலும் பார்க்க, பொஸ்னியாவில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களிலும் பார்க்க கேவலமான நிலைக்கு புலிகளால் தள்ளப்பட்டனர்.

என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். இதற்கு கடந்தகால சிங்கள அரசுகளின் நடவடிக்கைகளே நல்ல உதாரணமாகும்.

எனவே இந்த அரசு தொடர்ந்து புத்த பிக்குகளின் பேச்சுக்கும் சிங்கள பேரினவாதிகளின் பேச்சுக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருந்தால் தமிழர் பிரச்சினையும் இந்த அரசியல் திட்டங்களும் மாறாத சரித்திரமாகுமே தவிர பிரச்சினை தீராது.

63 வீதமான மக்கள், 'தமிழரின் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பேன்' என்று கூறிய சந்திரிகாவுக்கு வாக்குப் போட்டு ஜனாதிபதியாக்கினார்கள். ஜனாதிபதி இன்று தனது ஆதிக்கத்தைப் பாவித்து பிரச்சினையைத் தீர்க்க முயலவேண்டும். முயன்றால் முடியாதென்றில்லை.

தமிழ் சிங்கள மக்கள் இரு பகுதியினருமே இணைந்து கொண்டாடும் வெற்றிதான் உண்மையான வெற்றியாகும். இன்றேல், சில யுத்தங்கள் அரசால் வெல்லப்பட்டாலும் போர் வேறு வேறு கோணங்களில் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

ஆனால் இந்த அரசு பல சாட்டுக்களை சொல்லி தமிழ் மக்களை அழிப்பதோடு பிரச்சினையையும் தீர்க்காது விடுமேயானால், இன்றைய ஜனாதிபதிக்கும், 56இல் தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டு வந்த அவரது தந்தை பண்டாரநாயக்காவிற்கும், 72இல் தமிழர்கட்கு இருந்த சில உரிமைகளையும் எடுக்கும் சட்டத்தை கொண்டுவந்த அவரது தாயாரான திருமதி பண்டாரநாயக்காவிற்கும் எந்த வித வித்தியாசமும் இருக்க முடியாது.

## பழம்பெருமை பேசுவதில் பயனில்லை

சந்திரிகா தமிழரின் அபிலாஷைகளை நிறைவேற்றுவார் என்றே வட கிழக்கு தமிழ் மக்களும், வெளிநாட்டு தமிழ் மக்களும், வெளிநாடுகளும் எதிர்பார்க்கின்றன.ஓர் இனத்தை அவர்களது கலை, கலாசாரம், உறைவிடம் யாவையுமே அழிப்பது அப்பட்டமான காட்டுமிராண்டித்தனமாகும்.

எந்த ஒரு அரசும் ஈழப் பகுதி பிரிவதால் ஏற்படும் லாபநட்டங்கள் பற்றி இதுவரை பொருளாதார ரீதியில் பெரிதாக எந்த விவாதமோ கலந்துரையாடலோ நடத்தியதாகத் தெரியவில்லை. காலம் காலமாக பெரும்பான்மை அரசாக சிங்கள அரசும், அவை பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நலனிலேயே அக்கறையுள்ளதாக இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

உதாரணத்திற்கு 56 தனிச் சிங்களச் சட்டத்தின் பின், 72இல் புதிய அரசியல் சட்டம் உருவாகி, சிறுபான்மையினரின் உரிமையை காக்கும் 29வது சரத்தை இல்லாமல் செய்தனர். தேசியக் கொடியால் சிங்களத்துக்கும் புத்த சமயத்திற்கும் முக்கியத்துவம், புத்த சமயம் அரச மதம். இப்படியான விடயங்கள் பல இனங்கள் வாழும் நாட்டை ஒற்றுமையாக வாழ விடாது. பண்டைய பெரும்பான்மைப் பெருமை பேசி பிரயோசனமில்லை என்பதை அரசும் மற்றைய முற்போக்கு சிங்கள மக்களும் உணர வேண்டும்.

உண்மையில் எல்லா இனமும் சமத்துவமாக சம உரிமையுடன் இருக்க வேண்டுமானால், சிறுபான்மை தேசிய இனத்தை சிறுபான்மையாக்கி அடிமைகளாக்கும் சட்ட மூலங்களை எடுத்துவிட்டு, அனைவரும் சமமாக வாழக்கூடிய சட்டங்களையும், சம உரிமைகளுடன் பாரபட்சமற்ற ஆட்சி முறையையும் உருவாக்கி அதில் பல்லின மக்களும் சம உரிமையோடு பங்குபற்றும் நிலை உருவாக வேண்டும்.

பிரிட்டனில் 4 இனங்கள் சமமாக வாழ முடியுமெனில்,,, அங்கு சிறுபான்மையினத்தவர் பிரதமராக முடியுமெனில்,,, இந்தியாவில் பல இனங்கள் சமத்துவமாக வாழ முடியுமெனில்,,, அதோடு நரசிம்மராவும் தேவகௌடாவும் பிரதமராக முடியுமெனில்,,, எங்கள் சிறிய தீவில், 35 வீதமான தமிழ் மக்கள் வாழும் நாட்டில் நாம் ஏன் சம உரிமையுடன் வாழ முடியாது?

## பாலஸ்தீன மாதிரி தமிழ் தேசிய சபை

அதேநேரம் தமிழர்கள் வடகிழக்கு மலைநாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி, தமது கட்சிஅரசியலுக்கப்பால் போய் தமிழரின் உண்மையான எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டும். அவர்களது கல்வி, கலை கலாசாரம், விவசாயம், சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் முக்கிய விடயங்கள் பற்றி அக்கறையுடையவர்களானால், இவர்கள் ஒன்றுகூடி பாலஸ்தீன தேசிய சபை போன்ற அமைப்பொன்றை (தமிழ் தேசிய சபை) உருவாக்க வேண்டும்.

பாலஸ்தீன தேசிய சபையில் (PNC) PLOவை விட மிகுதி பாலஸ்தீனக் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. அதேபோல் தமிழ் தேசிய சபையில் (TNC) தமிழ் கட்சிகளை விட பொது அமைப்புக்களும் பங்கு பற்றி தமிழர் பிரச்சினையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

புலிகளோ, தாம் மற்றைய அமைப்புக்களை அழித்த பின் தம்மை PLO மாதிரி அங்கீகரிக்க வேண்டும் என கூறினார்கள். ஆனால் PLO வில் பல அமைப்புகள் உள்ளன என்பதை ஏன் இவர்களால் உணர முடியாமல் உள்ளது.

தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்கும் மொத்தக் குத்தகையை தாமே எடுத்துக் கொண்ட புலிகள், மக்களையும் பாதுகாக்கவில்லை மண்ணையும் பாதுகாக்கவில்லை. யாழ் குடாநாட்டையே முற்றாக பகற் கொள்ளையடித்துக் கொண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடத்த வந்திருக்கின்றனர்.

ஒன்றுமறியா புலிப் பாலகர்களோ தமது உயிரையே கொடுத்து யுத்தம் புரிகிறார்கள். ஆனால் அதில் குளிர்காயும் தேசியத் தலைவரும் சகபாடிகளும் எந்த முகத்தோடு யாழ் மக்களிடம் தாம் மக்களைப் பாதுகாத்தோம் மண்ணைப் பாதுகாத்தோம் எனக் கூறப்போகிறார்கள்? புலிப் பெரியவர்களின் போலித்தனத்தை இந்த சாதாரண புலிப் போராளிகள் உணரும்போது தான் தமிழ் மக்களுக்கு உண்மையான விடிவு வரும்.

## தமிழாட்சி குழப்பி காட்டாட்சி வந்தது

கடந்த 10 வருடங்களைத் திரும்பிப் பார்த்தால், புலிகளால் எதையும்

தொடர்ச்சி 12

படிப்பகம்

www.padippakam.com





# யுத்தம்தான்

ரி. சிறீதரன்

- இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு அடிப்படையாக இருந்தது.
- பல்லாயிரக் கணக்கானோரின் மரணத்திற்குக் காரணமாயமைந்தது.
- பலரைக் காணாமல் போகச் செய்தது.
- ஆட்கடத்தலுக்கும் படுகொலைகளுக்கும் வழிவகுத்தது.
- பல லட்சம் மக்களை அகதிகளாக உலகின் மூலைமுடுக்கெல்லாம் அனுப்பியது.
- புதைகுழி அரசியலை உருவாக்கியது.
- இந்நாட்டை ஒரு வெடிமருந்துக் கிடங்காக மாற்றியது.
- பெண்களை மலினப்படுத்தியது.
- ஜனநாயக மனித உரிமை நிறுவனங்கள் செயற்படமுடியாத நிலையை ஏற்படுத்தியது.
- பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களை நாசமாக்கியது.
- அனாதைகளையும் விதவைகளையும் உருவாக்கியது.

சத்ஜெய இராணுவ நவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் புதிய பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

இப்போது மக்கள் அடர் காடும் காடு சார்ந்த பிரதேசங்களிலேயே வசிக்கிறார்கள். மல்லாவி, துணுக்காய், வவுனிக்குளம், புதுக்குடியிருப்பு, மடு போன்ற பகுதிகளில்...

கூரையாக தார்பலின் சீலையைப் போட்டு விட்டு சுற்றிவர வேலிகளால் மறைப்புக் கட்டி வாழ்கிறார்கள். வயிற்றோட்டம், மலேரியா போன்ற நோய்கள் லேசாகப் பரவுகின்றன. தண்ணீர் ஒரு பாரிய பிரச்சினையாகையால் அதனால் பரவும் நோய்களும் அதிகரித்துள்ளன.

அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டாலும், அவற்றின் விலை தனியார் கடைகளில் அதிகரித்துள்ளன. அரிசி, 40ரூபாவாகவும், பாண் 10ரூபாவாகவும் விற்கிறது. உணவு, இருப்பிடம், குடிநீர், அடிப்படை வைத்திய வசதியைக் கூட மக்கள் இழந்து நிற்கிறார்கள்.

மறுபக்கம் சர்வதேச அளவில் இலங்கை பெற்றுள்ள அந்தஸ்து பற்றியும், கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை பெற்றுள்ள மகத்தான வெற்றி பற்றியும், உல்லாசப் பிரயாணிகளின் வருகை, வெளிநாட்டு முதலீடு பற்றியும், யுத்த வெற்றி பற்றியும் அரச கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்கள் நீட்டி முழங்குகின்றன. ஆனால் சுமார் இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் இடுக்கியினுள் சிக்கியதுபோல் படும் அவலத்தையும் மரணத்தையும் பற்றி இந்த அரச கட்டுப்பாட்டிலுள்ள சாதனங்கள் எதுவுமே குறிப்பிடுவதில்லை. அவை குறிப்பிடும் என எதிர்பார்க்கவும் முடியாது.

ஆனால் தகவல் தொடர்புச் சாதனத்துறை சுதந்திரம் பற்றிக் கதைக்கும் அரசு, இந்த மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் வெளி உலகுக்குத் தெரியக்கூடாது என்பதில் கவனமாகவே உள்ளது.

சகல யுத்த நடவடிக்கைகளும் இங்கு மக்களின் பேராலேயே நடாத்தப்படுகின்றன. எமது யுத்தம் தமிழ் மக்களுக்கெதிரானதல்ல என்று பாதுகாப்பமைச்சர், ஜனாதிபதி ஆகியோர் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அரசு கட்டுப்பாட்டினுள் வந்த கிளிநொச்சியினுள், ஒரு தெருநாயைத் தவிர வேறொரு ஜீவராசியும் இருக்கவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்களே கூறின.

என்னதான் நீட்டி முழங்கினாலும் யுத்தம் புரிபவர்கள், யுத்தம் புரிபவர்களைத் தவிர வேறொருவர் பற்றியும் அக்கறை கொள்ளவில்லை. எதிரி தரப்பில் எவ்வளவு பிணம் விழுந்தது என்ற தொகை செல்வதில் மாத்திரம் மகிழ்ச்சி காண்கிறார்கள் இது கிரிக்கட் ஸ்கோர் சொல்வதுபோல் இவர்களுக்கு உற்சாகம் தரும் விடயமாகி விட்டது.

'காயப்பட்ட படையினருக்கு இரத்தம் தானம் செய்யுங்கள்' என்று நாட்டு மக்களுக்கு அழைப்புவிடும் ஜனாதிபதி யுத்தத்தில் அழிந்து கொண்டிருக்கும் தமிழ் சமுதாயம் தொடர்பாக மூச்சு காட்டவில்லை.

அடிப்படை வசதிகளே அற்று அழிந்து கொண்டிருக்கும் இம்மக்கள் பற்றி இங்கு வேலை செய்யும் சர்வதேச நிறுவனங்கள் எம்.எஸ்.எப்., ஐ.சி.ஆர்.சி., போன்றவையே ஓரளவேனும் அக்கறை கொண்டு கருத்து வெளியிடுகிறார்கள்.

ஆனால் சமாதானத்தைக் கொண்டு வருவேன், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு தருவேன் என்று சொல்லிப் பதவிக்கு வந்த ஜனாதிபதி - அப்படிச் சொல்லி தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றி வாகை சூடிய ஜனாதிபதி - இதில் அலட்சியம் காட்டுவதும், படையினர் விடயத்தில் அளவுக்கதிகமாக அக்கறை காட்டுவதும் எந்த அபிமானத்திலிருந்து? எந்த நோக்கத்திலிருந்து? என்பது யாரும் புரிந்துகொள்ள முடியாததல்ல.

தற்போது சமாதானம் யுத்தத்தின் மூலம் என்று ஆகிவிட்டது.

இப்படி உலகத்தில் ஒருவரும் சமாதானத்தைக் காணவில்லை. இது ஜனாதிபதிக்கோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கோ தெரியாததா?

மிக அண்மைக்கால சர்வதேச உதாரணங்கள், யுத்தத்தின் மூலம் சமாதானம் காண்பதாக இருக்கவில்லை. தென்னாபிரிக்கா கறுப்பின மக்களும் - வெள்ளையர்களும், பாலஸ்தீனியர்களும் - இஸ்ரேலியர்களும், பிலிப்பைன்ஸ் அரசும் - மோரோ முஸ்லிம் மக்களும் யுத்தத்தை நிறுத்தித்தான் சமாதானத்தைக் கண்டார்கள்.

யுத்தங்கள் சில யதார்த்தங்களைப் புரிய வைக்கின்றன.

ஆனால், கடந்த 15, 16 வருட யுத்தம் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் பொதுவாக சிங்கள முஸ்லீம் மக்களுக்கும் ஏற்படுத்திய அனர்த்தங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

யுத்தம் தான் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு அடிப்படையாக இருந்தது.

யுத்தம் தான் பல்லாயிரக்கணக்கானோரின் மரணத்திற்குக் காரணமாயமைந்தது.

யுத்தம் தான் பலரைக் காணாமல் போகச் செய்தது.

அர்த்தமற்ற யுத்தம் தான் ஆட்கடத்தலுக்கும் படுகொலைகளுக்கும் வழி வகுத்தது.

அர்த்தமற்ற யுத்தம்தான் பல லட்சம் மக்களை அகதிகளாக உலகின் மூலைமுடுக்கெல்லாம் அனுப்பியது.

அர்த்தமற்ற யுத்தம் தான் புதைகுழி அரசியலை உருவாக்கியது.

அர்த்தமற்ற யுத்தம் தான் இந்நாட்டை ஒரு வெடிமருந்துக் கிடங்காக மாற்றியது.

யுத்தம்தான் பெண்களை மலினப்படுத்தியது.

யுத்தம் தான் ஜனநாயக மனித உரிமை நிறுவனங்கள் எவையும் செயற்பட முடியாத நிலையை ஏற்படுத்தியது.

யுத்தம்தான் பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களை நாசமாக்கியது.

யுத்தம்தான் அனாதைகளையும் விதவைகளையும் உருவாக்கியது.

ஆனால் தமிழ் மக்கள், அடக்குமுறைகள் அதிகரித்த போதே ஆயுதங்களை ஏந்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆனால் அரசோ தமிழ் மக்களின் போராட்டத்தை அடக்கும் நோக்கிலேயே யுத்தத்தை நடாத்தியது.

தமிழ்மக்களின் போராட்டத்தில் முளைத்த ஜனநாயக விரோதப் போக்கும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிப்பதைவிட யுத்தத்தில் வெல்வது என்ற கருத்தே கடந்த 17 வருட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும், தற்போதைய பொது ஜன முன்னணி ஆட்சியிலும் முதன்மை பெற்று விளங்குகிறது என்பது துரதிர்ஷ்டம் வாய்ந்த உண்மையாகும்.

அகதிகளாகும் மக்களின் நலன்களுக்கா யுத்தம் புரியும் சிங்கள இளைஞர்களுக்கா முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், யுத்தம் புரிபவர்களுக்குத்தான் முன்னுரிமை. யுத்தத்தின் தற்போதைய நிலை இதுதான்.

தமிழ் மக்கள் எத்தகைய துன்பங்களை அனுபவித்தால் என்ன? எமது படையினர் வெற்றி பெற்றுவிட வேண்டும்; அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

இன்று நாட்டின் பிரஜைகளாக-நாட்டின் மக்களாக அரசினால் கருதப்படுபவர்கள் சிங்கள மக்களும் சிங்கள இளைஞர்களுமே. தமிழர்கள் அன்னியர்கள்-சந்தேகப் பேர்வழிகள் என்ற உணர்வு இவர்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ளன.

புலிகளைப் பொறுத்தவரை, தமிழ் மக்களுக்குத் தீர்வு என்பதனை விட யுத்தம் என்பதே அவர்களின் இலட்சியமாக இருக்கிறது. அவர்கள் மக்களின் துயரங்கள் பற்றி சிறிதளவும் கவலைப்படவில்லை. யுத்தத்திற்கு சிறுவர்களைத் திரட்டுவது பற்றியோ, அதற்காக மக்களை வதைத்துப் பணம் கறப்பது பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை.

தமிழீழம் என்பதனைவிட, பிரபாகரனுக்காக யுத்தத்தில் மடிந்து போவது பற்றியே புலிகளின் தலைவரும் பெருமிதம் கொண்டிருக்கிறார். இந்த நாட்டில் வாழும் ஏனைய பிரஜைகள் பற்றி, அயல்நாட்டார் பற்றி, ஏன் சொந்த சமூகம் பற்றி, மாற்று அரசியல் கருத்துக்கள், இயக்கங்கள் பற்றி அவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது.

யாரை அழித்தாவது தமது குறுகிய அதிகார அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதே அவர்களின் நோக்கமாக இருக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை முன்வைக்காமல் யுத்தத்தில் வெல்வதன் மூலம் எல்லாவற்றையும் சரிக்கட்டிவிடலாம் என்ற போக்கும், மனித சமூகத்தின் சகல பெறுமானங்களையும் பீரங்கிக் குண்டுகளுக்கு கீழ்ப்படுத்திவிடலாம் - மனித உறவுகள் தேவை இல்லை என்ற போக்கும், இரு தரப்புக்குமே இந்தக் குறுகிய வட்டத்திலிருந்து வெளிவரமுடியாத இயலாத் தன்மையும், இந்த குறுகிய வட்டத்திலிருந்து - விஷச் சுழலிலிருந்து கொண்டு வெளிப்படுத்தும் வக்கிரமும் குரோதமும்தான் இந்த இனப்பிரச்சினை புரையோடிப் போனதற்குப் பிரதான காரணம்.

யுத்தம் வடகிழக்கில் மரணங்களை விளைவிக்கிறது. உடல், உள தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இது யாருக்கும் தெரியாததல்ல.

எனவே குறுகிய வட்டங்களுக்கு வெளியே பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும். குறுக்கு யோசனைகள் இத்தகைய அவலத்தை மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும்.

இந்த யுத்தம் புரியும் சக்திகள் ஒவ்வொன்றுமே ஒன்று மறுதரப்பை வெற்றி கொள்ளலாம் என்று நப்பாசை கொண்டுள்ளன.

ஆனால், இந்த சக்திகளின் வெற்றி தோல்வியை விட மக்களின் அழிவு என்பது மாத்திரம் தான் தெளிவாகத் தெரிகிறது.

மழைகாலம் ஆரம்பிப்பதனால், இயல்பான வாழ்க்கைக்கு முற்றிலும் முரணான அவல வாழ்வு வாழும் மக்கள் மரணத்தின் விளிம்புக்கு தள்ளப்படலாம். எதியோப்பியா, சோமாலியாவில் பஞ்சத்தால் மக்கள் அழிவு ஏற்பட்டது போன்ற நிலவரங்கள் உருவாகலாம்.

இவர்கள், தமக்குப் பாதுகாப்பு என்று கருதும் இடங்களுக்கு வந்துவிட விரும்புகிறார்கள். வவுனியாவிற்குள் வருவதற்குள்ள பாதுகாப்புக் காரணங்களுக்கான தடைகளும் அதற்கான பிரயத்தனத்தில் மக்களின் அலைச்சலும் அவர்களை மனம் பேதலிக்கச் செய்துள்ளது.

இந்தியாவிற்குச் செல்வதாக இருந்தால் கூட அவர்கள் கடலில் தடைகளை எதிர்நோக்குகிறார்கள். பெற்றோர்கள் தமது இளம்பிள்ளைகளை எங்காவது கண்காணாத இடத்திற்கு அனுப்பிவிட விழைகிறார்கள். இந்த நாட்டில் வாழ்க்கை நரகமாகி விட்டது. இந்த நாடு தாம் வாழ்வதற்கு உகந்தது அல்ல என்று கருதத் தொடங்கிவிட்டார்கள். ☞

படிப்பகம்

www.padippakam.com





அகதிகளாகும் மக்களின் நலன்களுக்கா, யுத்தம் புரியும் சிங்கள இளைஞர்களுக்கா முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், யுத்தம் புரிபவர்களுக்குத்தான் முன்னுரிமை. யுத்தத்தின் தற்போதைய நிலை இதுதான்.

ஆனால் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குள்ளோ அல்லது இந்தியாவிற்கோ செல்ல முடியாதவாறு அவர்கள் மூடுண்ட நிலையில் வாழ்கிறார்கள். கலாசாரம், கல்வி, பொருளாதாரம் எல்லாமே சர்வ நாசமாகிவிட்டது.

யாழ்ப்பாணம் ஒரு மூடுண்ட பிரதேசம்; கிளிநொச்சி ஜீவராசிகளற்ற இடம்; அரச கட்டுப்பாட்டிலில்லாத வன்னிப் பெருநிலப் பரப்பு எதுவித அடிப்படை வசதிகளுமற்ற மூடுண்ட பிரதேசம்.

அரச கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் பகுதி மூடுண்ட பிரதேசம். இதேபோல் கிழக்கில் கொக்கட்டிச்சோலை, வாகரை, அம்பாறை மாவட்டத்தின் பிரதேசங்கள் காணப்படுகின்றன. திருமலையில் மூதூர் பகுதி கிராமங்கள் அவ்வாறு காணப்படுகின்றன.

மற்றப்படி சோதனைச் சாவடிகள், பாஸ் என்பவற்றுடன் வசிக்க வேண்டும்.

மக்கள் குற்றுயிர் நிலைக்குச் சென்ற பின்னரும் பணம் கறக்கும் வேலைகள், சிறுவர்களை யுத்தத்திற்கு அணிதிரட்டும் வேலைகளை புலிகள் செய்யத் தவறவில்லை.

ஒரு தேசியஇனம்–ஒரு சமுதாயம் அழிந்து கொண்டிருக்கிறது. இன மோதல்களில் குளிர்காய விழையும் சக்திகள் இன மோதல்களுக்குத் தூபமிட்டபடியே இருக்கின்றன.

மனிதர்கள் தான் இந்த நாட்டில் வசிக்கிறார்களா என்று ஐயுறும் அளவிற்கு நிலவரம் மோசமடைந்திருக்கிறது.

உலகம் எங்கோ சென்று கொண்டிருக்கிறது. எமது நாடோ யுத்தத்தில் சிக்கி காட்டுமிராண்டி நிலையை நோக்கி வழிநடத்தப்படுகிறது.

நாம் நாகரீக உலகத்தைச் சேர்ந்த மனிதர்கள் என்பதனை நிருபித்தாக வேண்டும். இல்லையேல் அடுத்த நூற்றாண்டின் உலகம் எங்களை கணக்கில் எடுக்காது.

எனவேதான் சொல்கிறோம். என்ன விலை கொடுத்தாவது சமாதானத்தைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். சமாதானம் வெறும் வாய்ப்பந்தலாக இருக்க முடியாது. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதனூடானதாக அது இருக்க வேண்டும்.

நாம் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரசைகள் என்று கருதுவதற்கு இடமளியாததாக இருக்க வேண்டும். தமிழ் மக்களின் தனித்துவம், கலாசார, பொருளாதார வாழ்வுக்கு மதிப்பளிப்பதாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் சுயமரியாதை கௌரவத்தைக் காப்பாற்றுவதாக இருக்க வேண்டும். இனங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். மனித விழுமியங்கள், ஜனநாயக பண்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

வார்த்தைகளினால் இவற்றை அழகாக வடிக்க முடிகிறது. நடைமுறையில் முடியுமா என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

இலங்கையின் பலம்மிக்க அரசியல் சமூக சக்திகள் உள்ளார்ந்த ஆற்றலை இழந்துள்ள நிலையில் இது முடியுமா? என்ற கேள்வி எழவே செய்கிறது.

ஆனால், முடியும். இதயசுத்தியுடன் திறந்த மனத்துடன் முயற்சித்தால் முடியும்.

மக்களின் துன்பங்களை மனம் விட்டு ஒருகணம் சிந்தித்தால் முடியும்.

விஷச்சுழல் வட்டங்களுக்கு வெளியே நின்று சிந்தித்தால் முடியும்.

அரசு பாரம்பரிய பேரினவாத சிந்தனைகளிலிருந்து விடுபட்டால் முடியும்.

புலிகள் குறுகிய இனவாத ஜனநாயக விரோத சித்தாந்தங்களிலிருந்து விடுபட்டால் முடியும்.

பிரதான எதிர்க்கட்சி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முற்படுவதைக் கைவிட்டால் முடியும். அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்காக மக்களின் மனங்களில் விஷமேற்றுவதைக் கைவிட்டால் முடியும். நாடு படுபாதாளத்தினுள் சென்று கொண்டிருப்பதை, உண்மையான தேசப்பற்றாளர்களாக நின்று முயற்சித்தால் முடியும்.

ஆனால் பிரச்சினை புரையோடிப்போய்ச் சீழ்வடிவதால், எமது நாட்டின் நலனில் அக்கறையுள்ள அண்டை நாடுகளினதோ பிறநாடுகளினதோ உதவியும் வேண்டும். இதற்கு அரசு முன்முயற்சி எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் Front Line சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் இன்னொரு சக்தியின் மத்தியஸ்தம் பற்றிக் குறிப்பட்டுள்ளார்.

உண்மையில் புலிகள் இதனை வரவேற்க வேண்டும். கௌரவமான சமாதானத்தின் மீது அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் புலிகளும் அதற்குத் தயாராக வேண்டும்.


அதேவேளை மாற்றுத் தமிழ் அரசியல் சக்திகள், கருத்து வேறுபாடுகளைக் கொண்டவர்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்க வேண்டும். தாம்தான் தமிழ் மக்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்ற கருத்து இன்றைய யதார்த்தத்திற்குப் பொருந்தாது என்பதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களின் கட்சிகள், இயக்கங்களின் ஐக்கியமே உரிமைகளை உறுதியாக வென்றெடுக்க உதவும் என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனைய இன மக்களான சிங்கள, முஸ்லிம் மக்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும். சாதாரண மக்கள் எப்போதும் இனக் குரோதம் கொண்டவர்களல்ல. அவர்கள் சகல இன மக்களும் ஐக்கியமாக சமாதானமாக வாழ்வதையே விரும்புகிறார்கள். அப்பாவி மக்களுக்கெதிரான வெறித் தனமான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்.

சாதாரண அப்பாவி மக்களுக்கெதிரான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள், செல்வீச்சு, எல்லைக் கிராமவாசிகள் படுகொலை, ரயில் குண்டு வெடிப்பு ஆகியன எம்மீது காட்டுமிராண்டிகள் என்ற முத்திரையைப் பதிந்துள்ளன.

இந்தக் கறைபடிந்த வரலாற்றிலிருந்து விடுபடுவதற்கு, யுத்தத்தை வெறுக்கும்–சமாதானத்தை நேசிக்கும் சக்திகள் ஓரணியில் திரளவேண்டியது இன்றைய வரலாற்று அவசியமாகும்.

**இனங்களின் சுயமரியாதை கௌரவத்தை மதிக்கக் கற்றுக் கொள்வோம்.**
**ஒவ்வொரு தனிமனிதனதும் கருத்து வேறுபடும் உரிமையை மதிக்க கற்றுக் கொள்வோம்.**
**இனங்களிடையே வேற்றுமையை அல்ல, புரிந்துணர்வை ஏற்படுத்த பாடுபடுவோம்.**



## இடமிருந்து வலம்

1. இராணுவத்தினர் கடைசியாக புலிகளிடமிருந்து கைப்பற்றியிருக்கும் நகர்.
4. முட்டாள்.
6. ஸ்வரங்களைக் கொண்டு அமைக்கப்படும் இசைக் கோர்வை.
7. கண்டவர் விண்டிலர் விண்டவர் -----.
9. உண்மையில் செய்யாததைச் செய்வது போலக் காட்டும் நடிப்பு.
12. துணிகளை வெட்டும் கருவி.
14. விரைவு.
15. நகல். (குழம்பி)
17. வியாபாரம். (தலைகீழ்)
21. வினோதமானதாகவும் சிரிப்பை விளைவிக்கக் கூடியதாகவும் அமைவது.
22. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளைப் பேசும் மக்கள் அதிகமாக வாழும் நிலப் பகுதி.
24. பயன் உள்ள பொருளைப் பிழிந்து எடுத்தபின் எஞ்சியிருப்பது.
26. சமாதானத்திற்கு எதிராக உள்ளது. (தலைகீழ்)
27. முதலெழுத்தில்லாத பாசறை. (தலைகீழ்)
28. கோகுல கிருஷ்ணனுக்கு அண்ணன்.
31. மிகத் தெளிவானது.
32. வலிமையான மரம் ஒன்று.

## மேலிருந்து கீழ்

1. புதுமனை புகுவிழா.
2. கால் முடம்.
3. இறந்தவர் நினைவாகச் செய்யப்படும் திவசம்.
4. யானை மேல் அமர்ந்து செல்வதற்காக உள்ள இருக்கை.
5. 'வருக!' என்பது ----- வினைமுற்று.
8. இன்ப மயக்கம்.
10. கோணிப் பைக்கு கடைசி எழுத்தில்லை.
11. 'லா' சேர்த்தால் தலையில் போடலாம்.
13. கணவனும் மனைவியும்.
14. யானைக்கு உள்ள கை.
16. விருப்பமின்மையைச் சொல்லலாம்; அல்லது 'பெண் யானைச் செவி' எனலாம்.
18. பட்டத்தரசி. (தலைகீழ்)
19. குளம்.
20. சிரத்தையாக இல்லை, மேலோட்டம்.
23. துன்பத்துக்கு முதலெழுத்தில்லை.
25. கடையெழுத்தில்லாத கஞ்சிப் பானை.
28. தெய்வத்துக்கு காவு கொடுத்தல்; விபத்துக்கு உயிர் இழத்தல்.
29. காந்தி இறக்கு முன் சொல்லி அழைத்த கடவுள் பெயர்.
30. நினைத்தாலே இனிக்கும். (தலைகீழ்)

## கு.எ.போட்டி-26 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. லோகநாதன் | 2. கமக்காரன் |
| 6. அதிபர் | 3. நாசகாரம் |
| 9. மசக்கை | 4. தக்(கை) |
| 10. மண் | 6. அமரத்துவம் |
| 11. அக்கா | 7. திண்மை |
| 12. புனரமைப்பு | 8. புதிர் |
| 13. விகாரமான | 11. அவிசுவாசி |
| 14. சுரம் | 15. சாகுபடி |
| 15. சாது | 16. கரத்தை |
| 16. மேதை 18. வான் | 17. மேதினம் |
| 19. மெழுகுவர்த்தி | 19. மெல்லினம் |
| 21. பல் 22. பம்பரம் | 20. பொதும்பர் |
| 23. நெல்லியடி | 21. பல்லி |
| 25. கனம் | 23. நெல் |
| 26. வல்லினம் 27. காது | 24. (ப) யம் |
| 28. தொல்பொருள் | 26. வசை 27. கால் |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**வ. தவராஜா,**
**குவாரி றோட்,**
**தெகிவளை.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆறு பேர்கள் வருமாறு:**

1. சி. சிவஞானஸ்வரன்,
 13, புதிய பஸ் நிலையம், வவுனியா.
2. த. சிறீதரன்,
 11/3, வெபிலி குறுக்கு வீதி, மட்டுநகர்.
3. எஸ். தீபா,
 198, கோவிலடி, மல்கெலியா.
4. எம். மிக்கேல்,
 மின் நிலைய வீதி, மூதூர் 07.
5. ஏ. குமார்,
 9, புதிய பஸ் நிலைய கட்டிடம், வவுனியா.
6. ரி. கிரி
 194, திருமலை வீதி, மட்டுநகர்.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

புதிய கண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு.

இப்படிக் கேட்க எனக்கு உரிமை உண்டு:

கலை பற்றிய வரையறைகளையும் 'முன்மாதிரிகளையும்' இங்கே உருவாக்கி வைத்திருப்பவர்கள் யார்? எந்த உரிமையில் அவற்றைப் பொதுவான இலக்கணங்களாக்க முற்படுகிறார்கள்? அவர்கள் குறிப்பிடும் எதனோடும் பொருந்திப்போக முடியாத அசலான, தனிப்பட்ட வாழ்வனுபவங்களை படைப்பாக முன்வைப்பதிலிருந்து ஒருவனைத் தடுப்பதற்கும், புறக்கணித்துத் தூக்கியெறிவதற்கும், முத்திரை குத்தி ஒதுக்கி வைப்பதற்கும், வசைமாரி பொழியவும், அவதூறுகளைப் பரப்பவுமான அதிகாரத்தை அவர்களுக்கு யார் கொடுத்தார்கள்?

– தேவிபாரதி

படிப்பகம்

www.padippakam.com





# கட்சி ஊழியர்களைப் பயிற்றுவித்தல்

கட்சி அறிவாளிகளிடம் குட்டி முதலாளீய நிலையற்ற தன்மை நிரம்பி இருப்பதற்கு பல உதாரணங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு எடுத்துக் காட்டியுள்ளது. அத்தகைய அறிவாளிகள் நேரடியான மக்கள் பணியோ, மக்களிடையே பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டோ உறுதிப்படுத்தப் படாதவர் ஆவர்.

கொள்கையும் நடைமுறையும் இணைந்த ஒரு அடிப்படையில் நிலையாக, தொடர்ச்சியாக கட்சி ஊழியர்களை புதுப்பித்து வரவேண்டும். கட்சி ஊழியர்கள் பற்றிய கொள்கையின்மையின் விளைவாக கடுமையான ஸ்தாபன பலவீனங்கள் கட்சியில் வளர்ச்சியடைந்தன. இதனை அனுபவம் எடுத்துக் காட்டியுள்ளது.

ஒருபுறம் அறிவாளிகளுக்குள் முதலில் சிறிது கொள்கைப் பயிற்சியளித்து தயார் செய்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நேரடியான அடிமட்ட மக்கள் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். அதன் மூலம் அவர்களை உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னர்தான் அவர்களை கட்சித் தலைமையின் உயர் பதவிகளில் அமர்த்த வேண்டும்.

மறுபுறம், மக்கட்பணி ஆற்றிக் கொண்டு, வெகுஜன அமைப்புகளின் முக்கிய பொறுப்புகளில் இருக்கின்ற தோழர்களை கட்சிக் கல்விக்கு அனுப்ப வேண்டும். புதிதாக தொடர்ச்சியான கட்சிக் கல்வியினை அவர்களுக்கு அளித்திட வேண்டும்.

இத்தகைய இருபக்க அணுகுமுறையின்றி, ஒரு சரியான ஊழியர் கொள்கையினை உருவாக்கவோ, அமுலாக்கவோ இயலாது. அத்தகையதொரு அணுகுமுறையினை மீறிவந்ததாலே, கடந்த காலத்தில் கட்சியில் கடுமையான ஸ்தாபனப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

1946–47 காலகட்டத்தில் கேரளத்தில் கட்சிக்குள் மிகவும் கடுமையான உட்கட்சி ஸ்தாபன நெருக்கடி வளர்ச்சி பெற்றிருப்பதை நான் கண்டேன். ஒருபுறம் வெகுஜன அரங்கின் மூலம் வளர்ச்சி பெற்ற கட்சித் தோழர்கள் இருந்தனர். மறுபுறம் ஆரம்ப காலத்தில் சட்ட விரோதமாக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் கட்சிப் பொறுப்புகளை ஏற்று ஸ்தாபன பணிகளை செய்து வந்த கட்சித் தலைவர்கள் இருந்தனர். ஒரு பகுதியினர் வெகுஜன ஸ்தாபனங்கள் மூலம் வெகுஜனப் போராட்டங்களுக்கும் இயக்கங்களுக்கும் தலைமைதாங்கி அனுபவம் பெற்றிருந்தனர். இதேசமயம் மற்றொரு பகுதியினர் தலைமறைவாக இருந்துகொண்டு இயக்கத்தை வழிநடாத்திய செழுமையான அனுபவத்தினை மட்டுமே பெற்றிருந்தனர். இருவகையான பணிகள், கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருந்தன.

கட்சிக்குள் கூட்டுச் செயல்பாடு என்ற வழிமுறை பின்பற்றப்படாவிட்டால் அத்தகைய நெருக்கடிகள் தவிர்க்க முடியாது. அந் நெருக்கடியை வெல்லவும் முடியாது. சரியான முறையில் திட்டமிட்ட ஊழியர் கொள்கையினை முக்கிய அம்சமாகக் கொண்டு கட்சியை பலப்படுத்த வேண்டும்.

பல மாநிலங்களில் அத்தகைய தோழர்களைப் பற்றிய உதாரணங்களை நான் அறிவேன். அவர்களது பயிற்சியிலும், வளர்ச்சியிலும் இருந்த சமனற்ற தன்மை கட்சியில் கடுமையான ஸ்தாபனப் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்றுள்ளன. ஒருபுறம் நான் கட்சியிலுள்ள அதிகார வர்க்கத்தைக் கண்டேன். அவர்கள் வெகுஜன அரங்கில் பணியாற்றும் தோழர்களை ஆர்வத்துடன் அலட்சியப்படுத்தினர். மறுபுறம் தொழிற் சங்கத் தலைவர்களைக் கண்டேன். அவர்கள் தங்களது நடைமுறை வாதம் பற்றித் தங்களுக்குள்ளாகவே பெருமைப்பட்டுக் கொண்டனர். மக்கள் மட்டுமே எங்களின் வழிகாட்டிகள்–ஆசிரியர்கள் எனக் கூறிக் கொண்டனர்.

**– என்.கே. கிருஷ்ணன் அவர்களின் 'ஒரு கம்யூனிஸ்ட்டின் வாழ்க்கை வரலாற்று நினைவுகள்' என்னும் நூலிலிருந்து.**



அர்தமற்ற யுத்தத்தில் அகப்பட்டு அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் அடிப்படை வசதிகளையே முற்றாகச் சீர்குலைக்கும் நோக்குடன் கடந்த 03.10.96 அன்றிரவு மன்னார் தொலைத்தொடர்பு கோபுரமும், மன்னார் நகர்ப் பகுதிக்கு மின்சாரம் வழங்கிய மூன்று மின்சார இயந்திரங்களும் புலிகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. தொலைத்தொடர்புக் கோபுரம் அதிர்ஷ்டவசமாக அதிக சேதத்திலிருந்து தப்பியது. மின்சார இயந்திரங்கள் குண்டுத் தாக்குதலால் சுடர்விட்டு எரிந்து நாசமாகி மன்னாரை இருளில் ஆழ்த்திவிட்டன.




## உண்மையே வெல்லும்

உண்மையே வெல்லும்-
அதனால்தான் அதைப்
புதைத்துவிட விரும்புகிறோம்.

இடுகாடுகளில்தான்
எத்தனை உண்மைகள்
புதைக்கப்பட்டுள்ளன!

வெற்றி என்பது
போரிட்டே கிடைப்பது.
எனவே
உண்மையோடு நாமே
போரிடுவோம்.

நாங்கள் சொல்வதே செய்தி
நீங்கள் அறிந்தால் வதந்தி.
வதந்திகளை நம்பாதீர்!

இனி உண்மையைச்
சொல்லமாட்டார் என்ற
நிச்சயத்தில்தான்
அவர் புகைப்படத்தை
அதிகார ஸ்தலங்களில்
மாட்டியிருக்கிறோம்

படமா எடுக்கிறான்?
தாக்கு.
சமயோசிதமறிந்து
அது புளுகாது.

உண்மை தேடிகள்
உந்து விட்டிறங்கு முன்
உதை.

உண்மையின்
கற்பைக் காப்போம்.
அந்நியப் பார்வை
அதன் மேல் படாமல்.

உண்மை பாதிப்பின்
பலி.
எவனவன் எங்கள்
கண்ணிய முகமூடி
கழற்றுவது?

எங்கள் குழுக்கள் கண்டு பிடிக்கும்
உண்மை
ஆறிப்போனது
அகிம்சையானது
நேராக
ஆவணக் காப்பகத்தில்
அடுக்கப்படும்.

உண்மையைக் காக்க
அதைத்
தேசியப்படுத்துவோம்
அல்லது
நம்பகமான
தனியாரிடம் விடுவோம்.

பொய்மையே வெளியேறு!

பொய்மைக்கு எதிரான
புனிதப் போரில்
பொதுமக்களே அணிதிரள்வீர்!

- நீலமணி

## கைவிலங்கிட்டு

உண்மையைக் காணாதவரை நல்லது
கண்டால் ஊமையாயிரு
இருக்கப் பழகு
அது உன் வீரத்தைப் பற்றியதும் தான்.

தூரத்தில் புகை எழும்
யாரோ குளிர்காய்வதாகக் கொள்.
துப்பாக்கிச் சத்தம்
இடைவிடாது வரும் தெற்குக் கரையில்
நம்மூர் வண்ணான் துணி துவைக்கிறான்
அப்படி அடித்து, என
எல்லாரிடமும் அடித்துக் கூறு.
இலக்கியம் எழுது.

கற்பின் கதறலை
காலில் காயம் படாமல்
பூமியைப் பார்த்து நடக்கத் தெரியாதவளின்
புலம்பலாய் நினை.
பாடலைப் பாடு.

மழலையின் மரண ஓலம் அமைதியைக் குலைக்கும்
அதை இராவணன் தம்பி
மூச்சாய் அறி.
விமர்சனம் செய்.

இப்படியாகவே இருக்கப் பழகு.
இல்லாவிட்டால்
இருள் சேமிப்பு அறையில் அடைந்துகொள்
கைவிலங்கிட்டு.


உண்மையைக் கண்டால்
ஊமையாகவே இரு.
அது வீரம் பற்றியதும் ஆகும்.

– கனிவண்ணன்.

படிப்பகம்

www.padippakam.com





# காலத்திற்கு அப்பால்

ஸுப்ரபூ சங்கர்

யாரோ மண்ணாகிக் கொண்டிருந்தார்கள். கூட இருந்த கும்பலின் பரிணாமம், நெருப்புச் சட்டி சுமந்து கொண்டிருந்தவனின் வயது எல்லாவற்றையும் வைத்துப் பார்த்தால், போனவருக்கு (போனவளுக்கு?) வயது ஐம்பதைத் தாண்டிய கீழைந்துகளில் இருக்கும்போல் தோன்றியது.

வெறுமே இங்கே வரும் போதெல்லாம் சாவில் லயிக்கும் மனம், இன்று நிதர்சனமாய்ச் சாவைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அலை பாய்ந்தது.

அவனுக்காகக் காத்திருக்கிறேன். அவன் என்றால் கருப்பா? சிவப்பா? உயரமா குள்ளமா? இல்லை ஒருவேளை அவளோ? சாதாரணமாக அவள்கள் வராத இடம் இது. ஆனால் இந்த நிகழ்வு முழுதுமே அசாதாரணமாய்த்தானே இருக்கிறது. அந்த அசாதாரணத்வம்தானே யாரென்றே தெரியாத எவரையோ (ஒருவேளை எதுவாகக் கூட இருக்கலாமோ?) எதிர்பார்த்து அலுவலகத்துக்குக் கூட போகாமல் இங்கே வந்து சாவுக்கு நிழல் தந்து நிற்கிறேன்? மொட்டை மரம் தோற்ற அவலமாய்க் குறுகிய நிழல். சட்டைக்குள் வியர்வை ஈரக்கசிவு வருத்தியது.

அந்த எவனோ எதுவோ எங்கே?

முடிந்துவிட்ட வாழ்வுக்காய் ஓரிரு நீர்த் தெளிப்பும் முடிந்துவிட்டது போலும். புதைகுழிகளுக்கு இடையே ஒருவர்பின் ஒருவராய் ஊர்வலம் திரும்ப ஆரம்பித்தது. வெட்டியான் ஏற்கனவே இழுத்து விட்ட வேட்டியை மடித்த வண்ணம் யாரோ செத்த அடையாள மேட்டில் குத்துக்காலிட்டான். ஒற்றை ஊர்வலத்திலிருந்து ஒரே ஆள் விலகி என்னிடம் வந்தார்.

புன்னகைப்பதா வேண்டாமா என்று தீர்மானிக்கக் கூட நேரம் தரவில்லை எனக்கு. ஒரு காகித உறையைக் கொடுத்துவிட்டு ஒற்றை ஊர்வலத்தின் கடைசி இரயில் பெட்டியாய்ப் போய்ச் சேர்ந்து கொண்டார்.

ஏதும் புரியவில்லை. முதலில் நேற்றைய தொலைபேசிக் குரல், "நாளை மதியம் இந்து இடுகாட்டுக்கு வருகிறீர்களா!" என்று. குரலில் ஒரு கம்பீரம். ஆனால் இறைஞ்சியது. உண்மையில் அந்தக் குரலின் கம்பீரமான இறைஞ்சல்தான் குரலுக்குரியவர் யாரென்று தெரியாத நிலையிலும் என்னை இங்கே வரவழைத்தது. வந்தாலோ இந்த மௌனக் காகித உறை.

உள்ளே மூன்று முகவரிகள் மட்டுமிருந்தன. ஒன்றில் 'முதலில்' என்றும், மற்றதில் 'இரண்டாவதாய்' என்றும், மூன்றாவதில் 'கடைசியாய் அணுகவும்' என்றும் எழுதியிருந்தது.

இது என்ன இனம்புரியா விசித்திரம்?

ஃ ஃ ஃ

அழைப்புமணி சிங்கப்பூர்த்தனமாய் வாசலில் நின்று அழுத்திய என்னை எனக்கே வேறுபடுத்திக் குத்தியது. இளைஞனா இளைஞியா என அனுமானிக்க முடியாத ஒரு பதினைந்து கதவைத் திறந்து கடல் ஜந்துப் பார்வை ஒன்றால் என்னை உரசிப் பார்த்துவிட்டு 'டாட்' என்றது. லீவேஸுக்கு மேலே இடை(?) ஆட, அமானுஷ்யமான ஆப்பிரிக்க இசையினூடே மறைந்தது.

மேலேயிருந்து அவர் இறங்கி வரும்போது, ஒரு வாரத்திற்கு முன்னால் அப்பாவை எரித்துவிட்டு வந்தவர் இவர் என்பதை என்னால் சத்தியமாய் நம்பமுடியவில்லை.

"உட்காருங்களேன்!"

ஒரு சரியான ஆரம்பத்தை நான் தேடிக் கொண்டிருக்கும் போதே அவர் சொன்னார்.

"இட்ஸ் ஜஸ்ட் அனதர் இடியோசின்க்ரசி அஃப் மை ஃபாதர்"

பதிலுக்காக அவர் காத்திருந்தார். எனக்குப் புரிந்தவரை அங்கே நான் பதிலளிப்பதற்குக் கேள்வி ஏதும் இருக்கவில்லை.

"அவர் எனக்கு உண்மையான ஒரு தந்தையாய் இருந்தார் என்பதில் சந்தேகமில்லை. யூ ஸீ, ஐ ஹாப்பன் டு பீ ஹிஸ் ஒன்லி சன்" இதிலென்ன ஹாப்பண்ட் டு பீ?

"நான் ஆசைப்பட்ட வரைக்கும் என்னைப் படிக்க வைத்தார். நான் இஷ்டப்பட்ட ப்ரொஃபஷனையே நான் தேர்ந்தெடுக்க அனுமதித்தார். நான் விரும்பினவளையே கல்யாணம் செஞ்சு வச்சார். ஹீ வாஸ் வாட் ஒன் வுட் கால் ஏன் ஐடியல் ஃபாதர். ஒன்லி, என் டாட்டர்ஸாலே (ஓ, அப்போது அது இளைஞிதான்) அவரோட செனைலிடிக்கு ஒத்துப் போக முடியலை. அஃப் கோர்ஸ் ஐ வோண்ட் ப்ளேம் தெம் எய்தர். ஹீ வாஸ் நாட் ஈவன் ஸிக்ஸ்டி. தட் இஸ் டு எர்லி ஏன் ஏஜ் டு பிகம் செனைல் யூஸீ!"

எனக்கு இப்போதும் கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற்போல் தான் இருந்தது.

> புன்னகைப்பதா வேண்டாமா என்று தீர்மானிக்கக் கூட நேரம் தரவில்லை எனக்கு. ஒரு காகித உறையைக் கொடுத்துவிட்டு ஒற்றை ஊர்வலத்தின் கடைசி இரயில் பெட்டியாய்ப் போய்ச் சேர்ந்து கொண்டார்.

"இந்த வயசுலே போய் ரிக் வேதத்துக்கு என்ன பேஸிஸ்னோ, க்ரிஸ்டியானீட்டி ஏன் இண்டியாலே மெஜாரிட்டி ரிலீஜனாகலைன்னோ பேசிண்டிருந்தா நேச்சுரல்லி தே டோண்ட் லைக் இட்! இல்லே, ஃபிலாஸஃபி பேசறதுக்குத்தான் இதுதான் வயசா, சொல்லுங்க சார்!". இந்தத் தமிழர்கள் சார் போட்டுப் பேசுவதை நிறுத்தினால் பரவாயில்லை.

"அவர் மட்டும் அவரோட மெண்டல் அபரேஷன்ஸை அவருக்குள்ளேயே வச்சிண்டிருந்தார்னா, ஹீ வுட் ஹாவ் டைட் எ ஹாப்பியர் மான்!"

வெளியே வந்ததும் எதிரில் வந்த முதல் மனிதனை நிறுத்தி, அவனோடு தமிழில், தமிழில் மட்டும் பேச வேண்டும் போலிருந்தது. ஒன்று மட்டும் சாஸ்வதமாய்த் தெரிந்தது. அவர் சந்தோஷமான மனிதராய்ச் செத்தாரோ இல்லையோ, சாவு என்ற விடுதலை குறித்து சந்தோஷப்பட்டிருப்பாரென்றே தோன்றியது.

வீட்டிற்கு வந்து அமைதியாய் யோசித்துப் பார்த்தேன். இன்னும் ஒன்றும் பிடிபடவில்லை. சாகப் போகிறவர் சுடுகாட்டுக்குக் கூப்பிட்டுப் பிள்ளையைச் சந்திக்க வைக்கிறார். பிள்ளையானால் அப்பா மீது நாசூக்கான ஒரு குற்றப் பத்திரிகை வாசிக்கிறான்.

மேலே போ என்று ஏதோ ஒன்று எனக்குள்ளேயிருந்து துரத்தியது.

ஃ ஃ ஃ

மொட்டையாக முடிந்த ரயில்வே ஸ்டேஷனில் இருந்து ஒரு பிரிட்டிஷ் காலத்து கரி எஞ்சின் புகைமண்டலத்தினூடே நான்கைந்து பெட்டிகளை இழுக்கப் பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தது. ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்ததுமே தொழிற்சாலையின் அடையாள இலக்கணங்களாய் காக்கி அரை நிஜார்க்கூட்டங்கள் நிறையத் தென்பட்டன.

"கெமிஸ்ட் ஐயா வூடுங்களா?" என்று கேட்டு வழி சொன்னான் வெற்றிலை பாக்குக் கடைக்காரன்.

அந்தப் பெண் நிச்சயமாய் ஐந்தடிக்கு மேல் இருக்க மாட்டாள். கண்ணாடிக்குள்ளே அழகிய கண்கள் பதினைந்து வருடத்துக்கு முன்னால் அவள் அழகியாய் இருந்திருப்பாள் என்று சொல்லின. வாசலில் இருந்த தடுப்புக் கம்பிகளினூடே சூரியன் சதுர வடிவமெடுத்து அவள் முகத்தில் படிந்து அவளைச் சிவப்பாய்க் காட்டினான்.

அவரைப் பற்றி நான் பேச ஆரம்பித்த போது கண்கள் லேசாகக் கலங்கின அவளுக்கு.

"அவனுக்கு இப்படியாகும்னு கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. எங்க குடும்பத்திலேயே எனக்கும் அவனுக்கும் நடுப்பற இருந்த அன்யோன்யம் மத்த அண்ணா தங்கைகளுக்குக் கூட இருந்ததில்லை.

குரல் லேசாகக் கம்மியது.

"அவன் காலேஜ் படிச்சிண்டிருந்தபோ, லீவுக்கு ஆத்துக்கு வரத்தே எல்லாம் யாருக்கு என்ன வாங்கறானோ இல்லையோ எனக்கு ஏதாவது வாங்கிண்டு வராம இருக்கவே மாட்டான். யாருக்குமே சொல்லாத விஷயங்களைக் கூட நான் அவன் கிட்டேதான் சொல்லுவேன்.

"சின்ன வயசிலிருந்தே எந்த விஷயத்தையும் சரியா அனுமானிச்சுப் புரிஞ்சுக்கற சக்தி அவனுக்கு அதிகம். அதனாலதானோ என்னவோ, சாமிமேல நம்பிக்கை இருந்தாலும், அவனுக்கு சாஸ்திரம் சம்பிரதாயம் இதுலே எல்லாம் நம்பிக்கை கிடையாது.

"அவனோட வயசுக்கார மத்தப் பசங்கள்லாம் சினிமா அது இதுனு அலைஞ்சிண்டிருந்தப்போ, அவன் மட்டும் தடி தடியா ஒண்ணும் புரியாத புஸ்தகம்லாம் படிச்சுண்டு இருப்பான். என் இன்னொரு அண்ணா தம்பிலாம் கூடி அவனை மறைமுகமா லூஸ் அது இதுனு கலாட்டா பண்ணுவா. அவன் என்னடான்னா புரிஞ்சும் புரியாத மாதிரி கர்ம சிரத்தையாத் தானுண்டு, தன் புஸ்தகம்லாம் உண்டுன்னு இருந்துடுவான்".

திரும்பி வரும்போது முன்னிருட்டு. பஸ் பயணம் பூரா ஒரே சிந்தனை. முன் பின் தெரியாத ஒருத்தரைப் பத்தி இதென்ன பலவந்தமான ரிப்போர்ட்டர் வேலை? ஆனால், என்னவென்று புரியாத ஒரு அமைவு நிகழ்வாகிறது புரிந்தது. அடுத்த கட்டத்திற்குப் போகும்போது, ஜிக்ஸா பஸ்ல் போடும் சிறுவனின் ஆர்வமிருந்தது.

ஃ ஃ ஃ

வாசலில் கோலப்பொடி லேசாகக் கரைந்திருந்த நீரின் ஈரத்தின் மீது சூரியன் இரக்கமில்லாமல் காய்ந்து கொண்டிருந்தான். தாழ்வான நிலைப்படியில் குனிந்து நுழைந்த போது, அத்ருஸ்யமான ஒரு திரை வெப்பத்தை வெளியே நிறுத்திவிட்டு லேசான வெளிச்சத்தை மட்டும் உள்ளே அனுமதித்திருந்தது வியப்பளித்தது. முற்றத்தில் ஒரு பலகையும், எதிரே ஒரு செப்புத் தாம்பாளத்தில் வேலைப்பாடமைந்த வெள்ளிக் கிண்ணமொன்று வெள்ளி உத்தரணியுடன் பிராமணீயத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. சுவரெல்லாம் வெளிச்சம் பட்டாலே முகம் தெரியாமல் ரசம் போயிருந்த பல்வேறு பருவத்தினர், போட்டோ பிரேமில் படிந்து ஒட்டடை தந்த நிழலில் வீற்றிருந்தனர்.

முப்புரிநூலில் வெள்ளிக் காசொன்று ஜொலிக்க உள்ளே நுழைந்தவரின் முகச் சுருக்கங்களை நீக்கிவிட்டால் ஐம்பதுதான் மதிப்பிடலாம். பின்னால் வந்த மீசைக்கார உருவமொன்று, அவருடைய 'எலே, அதை அப்படி ரேழிலே போடுடா' விற்கும் கீழ்ப் படிந்து தலையிலிருந்த மூட்டையை 'உஸ்' ஸென்ற இறைப்போடு புழுதி பறக்க இறக்கி விட்டு, ஒரு முனகலாக 'வரேங்க' வோடு மறைந்தது.

மகனைப் பற்றிய நினைவில் அந்தப் பெரியவர் நெற்றிச் சுருக்கங்கள் சிரித்தன.

"கெட்டிக்காரப் பய, சமயத்தில புத்தி குதர்க்கமாய் போகுமே தவிர, ரொம்ப சூட்டிகை, திண்ணைப் பள்ளிக்கூடத்திலே இவன் கேக்கற கேள்வியே புரியலைன்னு வாத்தியார் எங்கிட்ட வந்து அழுவார். பத்து பதினைந்து வயசுலேயே எங்கிட்டயே ரொம்ப அசாத்யமான கேள்விகளெல்லாம் கேட்பான். நான் கூட இதென்னடா இந்த குக்கிராமத்திலே இப்படி ஒரு தீட்சண்யம் வந்து மாட்டிண்டிருக்குது, விட்டகுறையோனு நினைச்சுப்பேன், என்ன இருந்தாலும் திவான் ராமையர் பேரனோல்லியோ?

"அப்போல்லாம் இந்த வீடு வீடாவா இருக்கும்? சத்திரம் தான். 'அப்பாவோட கூடப்பிறந்தவா நிறைய பேர் நொடிச்சுப் போயிட்டா. அவா குழந்தைகளுக்கு எல்லாம் இதான் வீடு. ரொம்ப ஸ்வாதீனம். ஆனாலும் என்னவோ எல்லாப் பெரியவாளுக்கும் இவன் மேல ஒரு தனி வாத்ஸல்யம். வீடு கொள்ளாமக் குழந்தைகள்; பள்ளிக்கூடம் நடத்தலாம். எல்லாருக்கும் இவன்தான் லீடர்.

"அவன் பிறந்தபோதே நினைச்சேன். இது ஏதோ ஞானஸ்வருபம்னு. அவன் பிறந்த நேரத்திலே சுக்ரப்ருஹஸ்பதியர் இருந்த தீட்சண்யம் இருக்கே...." எனக்குப் புரியாது என்று நினைத்தாரோ என்னவோ, அவர் அதற்கு மேல் தொடரவில்லை.

அவர் உபசரிப்பைத் தட்டமுடியாமல், மடிசார்ப் பாதங்களைப் பார்த்தபடி நுனி இலையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, மனம் துளைத்தது – மேலே என்ன? இதுவரை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாய் வந்து இப்போது அர்த்தமில்லாமல் முடிந்தாற்போல் உணர்வு. இல்லை அர்த்தமிருந்து என்னால் தான் புரிந்துகொள்ள முடியவில்லையா?

சாப்பிட்டதும் கிளம்பப் பிரயத்தனப்பட்டேன்.

"வெற்றிலை போட்டுண்டு போலாமே!"

வெற்றிலைத் தாம்பாளத்தோடு ஒரு காகித உறையைக் கொண்டு வந்தார் அவர்.

"போனதரம் வந்தப்போவே அவன் இதை எங்கிட்டே கொடுத்தான் – என்னிக்காவது ஒருநாள் நீங்க இதுமாதிரி விசாரிச்சுண்டு வருவேள்னு சொல்லி, நீங்க வந்தா, திரும்பக் கிளம்பிப் போறதுக்கு முன்னாடி தரச் சொன்னான்".

உறைக்குள்ளே என்ன இருக்கும் என்ற எதிர்பார்ப்பு அவர் முகத்தில் இம்மியும் இருக்கவில்லை. ஏதோ சகஜமான ஒன்றைப் போல உறையை என்னிடம் கொடுத்துவிட்டு, வெற்றிலைத் தாம்பாளத்தை முக்காலியில் வைத்துவிட்டு 'சித்த வரேன்' என்று உள்ளே போய்விட்டார்.

உறையில் அழகிய ஓடும் கையெழுத்தில் தமிழில் என் பெயர் எழுதியிருந்தது. ஒட்டியிருந்த உறையைக் கிழித்தேன். கடிதம் ஒன்று.

"என் சாவில் பரிச்சயம் கொண்ட இனிய நண்பரே!

நன்றி – நான் கொடுத்த முகவரிகளைத் தேடி அலைந்தமைக்காய். நீர் செய்வீர் என எனக்குத் தெரியும்.

உம்மைப் பொறுத்தவரை – உம் உலகில் நான் தோன்றியது, என் சாவில் தொடங்கி என் வாழ்க்கை உங்கள் முன் ஓர் தந்தையாய், சோதரனாய், பின் தனயனாய் நிகழ்ப்படமாகி என் பிறப்பில் முடிந்தது. உங்கள் தேர்வில் நான் முதலில் இறந்தேன். பின் பிறந்தேன் என்றால் உங்கள் உலகத்தில் எனக்கு எது இறந்தகாலம், எது நிகழ்காலம், எது வருங்காலம்? உங்களைப் பொறுத்தவரை என் பிறப்பு என் இறப்புக்கு எதிர்காலம். என்றால் எதுதான் காலம்?"

– நன்றி : லயம்

படிப்பகம்

www.padippakam.com



# நின்றபோது விரட்டியவர்களும் இல்லாதபோது ஏங்குகிறார்கள்

**1987 யூலை 29 ல்** இந்திய–இலங்கை ஒப்பந்தம் உருவானபோது அதனை ஸ்ரீ.ல.சு. கட்சி, சிங்கள இனவாதிகள், ஐக்கிய தேசியக் கட்சியில் பெரும்பான்மையோர் எதிர்த்தார்கள். ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட –புலிகள் உட்பட– பல தமிழ் கட்சிகளும், சில வாரங்களின் பின் இதனை எதிர்க்கத் தொடங்கினார்கள்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். மாத்திரம் தான் ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளையும், ஒப்பந்தத்தில் இன்னும் பல விடயங்கள் பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியதுடன், ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

புலிகள் ஒப்பந்தத்தை நிராகரித்து இந்திய இராணுவத்திற்கெதிராக யுத்தம் ஒன்றை தொடங்கியதால், தமிழ் மக்களும் பாரியளவில் பாதிக்கப்பட்டார்கள். புலிகளின் பிரச்சாரமும், யுத்த பாதிப்புகளும் சேர்ந்து இந்திய இராணுவத்திற்கெதிரான ஓர் மனோநிலையை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

> முடிவுறாத யுத்தம்.... யாராலும் வெல்லப்பட முடியாத யுத்தம்.... தமிழர் எல்லோரும் பயங்கரவாதிகள் என்ற முத்திரை.... இவைதான் இன்றைய நிலை.

பின்னர் பிரேமதாசா ஜனாதிபதியானவுடன், இந்திய இராணுவம் வெளியேற வேண்டுமென அறிக்கை விடுத்தார். புலிகளும் பிரேமதாசாவுடன் இணைந்து கொண்டு இந்திய இராணுவத்தை வெறியேற்றினால், தாம் சிறீலங்கா அரசுடன் பேசுவதாகக் கூறினார்கள்.

அச்சமயத்தில் இந்தியத் தலையீட்டை எதிர்த்த புலிகளும், பொன்னம்பலங்களும், தமிழ் பத்திரிகைகளும், இன்னும் பல சிங்கள புத்திஜீவிகளும்கூட இன்று இந்தியத் தலையீட்டைப் பற்றியோ அல்லது மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்தைப் பற்றியோ பேசுபவர்களாகவே உள்ளார்கள்.

தனிநாட்டை அல்லது தமிழீழத்தை எதிர்த்த இந்தியா, தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தது. அதற்காக தன்னுடைய இராணுவத்தையும் அனுப்பி வைத்தது.

ஆனால் இவற்றைப் புரிந்து கொள்ளாத புலிகள், இந்தியாவையும் பகைத்து எம்மால் தனிநாட்டை பெற்றுவிட முடியும் என்ற வீறாப்பில் இந்திய இராணுவத்துடன் மோதினார்கள்.

இன்றும், 'உலகில் நாலாவது பெரும்படையை விரட்டியவர்கள்' என வீறாப்பு பேசுகின்றார்கள் (ஆனால் சிறிலங்கா இராணுவத்தை வெல்லமுடியவில்லை) இவர்களுக்கு பக்கப்பாட்டு பாடிய பத்திரிகைகளும், மக்களும் இன்று இந்தியா உதவிக்கு வராதா என்று ஏங்குகின்றார்கள்.

புத்தியை தீட்டாமல் கத்தியை தீட்டியவர்களை ஆதரித்ததால் ஏற்பட்ட துன்பத்தை இப்போது புரிந்து கொள்கின்றார்கள்.

இந்திய உதவி இருந்ததால், வடகிழக்கு மாகாணசபை ஏற்படுத்தப்பட்டது. உணவுக்கோ எரிபொருளுக்கோ தட்டுப்பாடு ஏற்படவில்லை; மக்கள் இலட்சக்கணக்கில் அகதிகளாகவில்லை; யாழ்ப்பாணம் கிளிநொச்சி தரைமட்டமாகவில்லை.

மின்சாரம் இருந்தது. கொழும்பில் இருந்து கே.கே.எஸ். வரை புகையிரத சேவை இருந்தது. கல்வி இருந்தது.

ஆனால், புலிகளின் ஆட்சிக் காலத்தில் மின்சாரமும் இல்லை; தண்டவாளமும் இல்லை; எரிபொருளும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக யாழ்ப்பாணமும் கிளிநொச்சியும் தரைமட்டமாக்கப்பட்டது.

இன்று, முடிவுறாத யுத்தம்.... யாராலும் வெல்லப்பட முடியாத யுத்தம்.... தமிழர் எல்லோரும் பயங்கரவாதிகள் என்ற முத்திரை.... இவைதான் இன்றைய நிலை.

இவ்வளவு நெருக்கடிகளுக்கும் பிறகு, இந்திய உதவியை மறுதலித்தவர்கள் எல்லோரும் இந்திய உதவி வேண்டுமென்கின்றார்கள்.

இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தியையும் கொலை செய்து, ஒட்டுமொத்தமான இந்திய எதிர்ப்பையும் சம்பாதித்த பின்னர், இந்திய உதவி பற்றி பேசுகின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையிலும், சர்வதேச அரங்குகளிலும், இலங்கையின் இனப் படுகொலையைக் கண்டித்து, ஈழத் தமிழரின் போராட்டத்துக்கு ஓர் சர்வதேச அந்தஸ்தை பெற்றுக்கொடுத்தது இந்தியா. சிறீலங்கா அரசுடன் திம்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதன் மூலம் விடுதலை இயக்கங்களுக்கு கௌரவத்தையும், அந்தஸ்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது இந்தியா.

இன்று புலிகள் பயங்கரவாதிகள் எனவும், எத்தனை ஆயிரம் தமிழன் கொல்லப்பட்டாலும் ஏன் என்று கேட்க நாதியற்றும் போய்விட்ட நிலைமை.

இவற்றைப் பூரணமாக புரிந்து கொண்டதால்தான், ஈ.பி.ஆர்.எல்.எப். இந்தியாவை ஓர் நட்பு சக்தியாக பார்த்தது. அது மாத்திரமல்ல, பிரேமதாசா அரசால் ஈ.பி.ஆர்.எல்.எப். மாகாணசபை கலைக்கப்பட்ட போதும் கூட நாம் ஒரு விடயத்தை தெளிவாக கூறினோம். இந்திய அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் இப்பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதை நாம் தெளிவுபடக் கூறினோம்.

அது மாத்திரமல்ல, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று ஏற்படாமல் இலங்கையில் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதையும் நாம் தெளிவாகக் கூறினோம்.

இன்று அரசும், புலிகளும், அன்று எதிர்த்த தமிழ்ப் பத்திரிகைகளும், இன்னும் பலரும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்ற நிலைக்கு வந்துள்ளார்கள். அதிலும் இந்தியாவை ஒதுக்கிவிட முடியாது என்பதை பலரும் புரிந்து கொண்டுள்ளார்கள்.

> தனிநாடுதான் ஒரே தீர்வு, யுத்தம்தான் அதற்கான ஒரேவழி என நினைப்போரும், அதற்கெதிரான சகலரையும் கொன்றொழிப்பது தான் முடிவு என நினைப்போரும் எவ்வாறு இந்திய தலையீட்டைப் பற்றி யோசிக்க முடியும்.

அண்மையில் 'லயன்ஸ் கழக' கூட்டத்தில் பேசிய குமார் பொன்னம்பலமும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கு ஆலோசகரான பிறட்மன் வீரக்கோனும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்திப் பேசி உள்ளார்கள்.

அதிலும் பிரத்தியேகமாக பிறட்மனைப் பொறுத்தவரையில், இந்தியாவின் ஒத்துழைப்பும் இதற்குப் பெறப்பட வேண்டும் என்பதையும் தெளிவுடுத்தியுள்ளார்.

இலங்கையில் சிறுபான்மை இனமாக எமது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கும் நாம், எமது அண்டை நாடான–இப்பிராந்தியத்தின் குட்டி வல்லரசான இந்தியாவை எமது நட்பு சக்தியாக வைத்திருக்க வேண்டும் என்பதே எமது தெளிவான முடிவாக இருக்க வேண்டும்.

இலங்கையில் ஏற்படக்கூடிய எந்த மாற்றமும் இந்தியாவின் பாதுகாப்பு, அதன் ஸ்திரத்தன்மைக்கு பாதகமாக அமையலாம் என இந்தியா எண்ணுவதால், இப்பிரச்சினைக்கான தீர்வில்–இல்லையேல் அது தொடர்பான நடவடிக்கைகளில் அவர்களும் பங்குதாரர்களாக இருப்பார்கள் என்பது புரிந்திருந்தால் பல அழிவுகளையும் இழப்புக்களையும் தவிர்த்திருக்க முடியும்.

தனிநாடுதான் ஒரே தீர்வு, யுத்தம்தான் அதற்கான ஒரேவழி என நினைப்போரும், அதற்கெதிரான சகலரையும் கொன்றொழிப்பது தான் முடிவு என நினைப்போரும் எவ்வாறு இந்திய தலையீட்டைப் பற்றி யோசிக்க முடியும்.

இன்றும்கூட மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டுள்ள புலிகளும், அரசும், ஏனையோரும் அதற்கு நடைமுறை வடிவத்தைக் கொடுக்க முன்வரவேண்டும்.

ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர், புலிகள் தொடர்பாக இந்தியர் விரோத மனப்பான்மையை கொண்டுள்ளார்கள் என்பது உண்மையே. இந்திய மக்களின் உணர்வுகளுக்கு இந்தியா மதிப்பளிப்பதை யாரும் தவறாக பார்க்க முடியாது.

அதேசமயம் இலங்கைப் பிரச்சினை தீரவேண்டுமென்பதில் இந்தியா அக்கறையாக உள்ளது என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இந்தியா தனியாக மத்தியஸ்தம் வகிப்பதில் புலிகளுக்கு மாறுபட்ட அபிப்பிராயங்கள் சிலசமயம் இருக்கலாம். எனவே இந்தியா உட்பட இப்பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு தயாராக இருப்பதாகக் கூறும், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, போன்ற நாடுகள் கூட்டாகச் சேர்ந்து இப்பிரச்சினையைத் தீர்க்க மத்தியஸ்தம் வகிக்க முடியும்.

எனவே ஈ.பி.ஆர்.எல்.எப். ஐ இந்தியாவின் கூஜாக்கள் என்று கூறியோரும், ஈ.பி.ஆர்.எல்.எப். எவ்வளவு புத்திபூர்வமான முறையில் செயல்பட்டது என்பதை ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகின்றோம்.

ஈ.பி.ஆர்.எல்.எப்., இன்றும் திடமாகப் பேசுகின்றதென்றால், அதன் தூரநோக்கும், மாற்றமடையாக கொள்கையுமே அதன் அடிப்படையாகும். ●

## இலங்கையில் சமாதானத்தை.... (7ம் பக்கத் தொடர்ச்சி)

உருப்படியாகச் செய்ய முடியவில்லை; அவர்களால் மேற்கூறிய அழிவுகள்தான் வந்துள்ளது; அவர்கள் தமது அதிகாரத்தை தக்கவைக்கவே போராட்டத்தைத் தொடர்கிறார்கள்; அவர்கள் மக்களை மந்தைகளாகவே பார்க்கிறார்கள் என்பதையெல்லாம் இந்த புலிப் போராளிகளும் ஆதரவாளர்களும் உணர முடியும்.

உதாரணத்திற்கு, மேற்கூறியது போல் இந்திய இலங்கை ஒப்பந்தம், அதனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழராட்சி, அதை நடைமுறைப்படுத்த வந்த IPKF, அதோடு அதை நடாத்த தமிழராட்சியால் கொண்டுவரப்பட்ட தமிழ் தேசிய இராணுவம் யாவற்றையும் எதிரியான பிரேமதாசாவோடு கூட்டு சேர்ந்து அழித்தது யார் என்று இப்புலிப் போராளிகள் உணரவேண்டும். இதை இவர்கள் செய்தது யாரின் நலன் கருதி, தமிழரின் நலனா? அல்லது புலிகளின் ஆதிக்க வெறியா?

### தமிழரின் இறப்பில் குளிர் காய்வோர்

வெளிநாட்டில் இருக்கும் புலி ஆதரவாளர்களோ, தமது அரசியல் தஞ்சம் நிலைக்க வேண்டுமானால் புலிகள் சண்டையை தொடர வேண்டும் என விரும்புகின்றனர். இவர்களது எண்ணத்தை புலிகளும் சரியாய் பாவிக்கின்றனர். அதாவது அதைக் கூறியே பணம் வசூல் செய்கின்றனர்.

கொழும்பில் நிரந்தரமாக வாழும் தமிழர்களோ, புலிகளின் வீரப் போரால் தாம் தலைநிமிர்ந்து திரிகிறார்களாம். ஆனால் உண்மையாக லட்சக்கணக்கான தமிழ் மக்கள் வடகிழக்கில் புலிகளின் அடாவடித்தனங்களாலும், காட்டாட்சியாலும் தலைகுனிந்து வாய்மூடி மவுனிகளாக வாழ்வதையோ, யுத்தக் கொடூரங்களில் சிக்கித் திணறுவதையோ இவர்களால் உணர முடிவதில்லை.

இந்தியாவில் தமிழ் அகதிகள் படும் அவஸ்தைகள், கொழும்பில் வவுனியாவில் தமிழ் அகதிகள் படும் கஷ்டங்களை, இந்த புலம்பெயர்ந்த தமிழ் அகதிகள் என்று கூற வெட்கப்படுகிற–தமிழரின் இறப்பில் குளிர் காயும் அகதிகள் உணரவேண்டும்.

### செத்தவீடு போதும் செய்ய நல்லதுண்டு

அரசின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ள நிலையில், மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தம் தேவையாகிறது. இதற்கு தமிழ் நாடு அரசும் மத்திய அரசும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அதோடு இதுவரை புலிகளால் மௌனமாக்கப்பட்டிருந்த தமிழ் கட்சிகள் பக்கபலமாக இருக்க வேண்டும். கிராமம் கிராமமாக பிரச்சினையை விளக்கி சத்தியாக்கிரகப் போராட்டங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஓர் மக்களெழுச்சியை உருவாக்க முடியும்; யுத்த சக்திகளுக்கு நெருக்குதல் கொடுக்க முடியும்.

அரசும், தாம் தேர்தலில் கூறியபடி ஈழத்திற்கு குறைந்த, ஆனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஈடுசெய்யக் கூடிய ஆவணி 95இல் கொண்டுவந்த அரசியல் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசு, மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை எனலாம். ஆனால் அரசு–புலி பேச்சுவார்த்தைக்கு முன், முதலில் பிரச்சினையைத் தீர்க்க அரசுக்கு உண்மையான நோக்கம் இருந்தால் ஐ.தே.க. உடன் கதைத்து அதற்கான பாதையைத் திறக்க வேண்டும். இதற்கும் அரசு மூன்றாவது நாட்டு உதவியை நாடமுடியும். அதோடு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் உண்டு.

இவற்றின் பின் ஓர் மூன்றாவது நாட்டு மத்தியஸ்தத்துடன் அரசும் மற்றைய சிங்களக் கட்சிகளும் தமிழ் கட்சிகளோடு சேர்ந்து புலிகளும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாம். இங்கு புலிகளின், 'முதலில் பேச்சுவார்த்தை, பின் யுத்தம்' என்ற விடயங்கட்கு முற்றுப்புள்ளி வைத்து இனியாவது ஓர் சமாதான ஜனநாயகத்திற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அரசும் சரி புலிகளும் சரி தொடர்ந்து தமிழரின் 'செத்த வீட்'டில் குளிர்காய்வதை நிற்பாட்டி, பிரச்சினையை உண்மையாக உணர்ந்து தீர்க்க முன்வர வேண்டும். ●

> “ நல்லவனாயிருந்து தோல்வியுறுவது கெட்டவனாயிருந்து ஜெயிப்பதைவிட மேல்
>
> - யாரோ ”

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்